ஸ்ரீ

திருப்பதி

# வெங்கடேசபெருமாள் நாடகம்.

OFFICE OF THE ... 14 JAN 1919



புஸ்தகவியாபாரம்

தங்கவேலு முதலியாரால்

கொடுக்கப்பட்ட இந்நாடகத்தை

ரூவணா முனிசாமி முதலியாரால்

சகலசுதர்தாத்துடன் பெற்றுக்கொண்டு

ஸன் ஆப் இந்தியா பிரஸ்ஸில்

பதிப்பிக்கப்பட்டது.

இதன் விலை ] 1919 [ அணா 4

ரிஜிஸ்டர்ட் காபிரைட்டு.

ஸ்ரீராமஜெயம்.

# திருப்பதி
# வெங்கடேசபெருமாள் நாடகம்.

### விநாயகர் துதி.

ஓமெனும்பொருளே போற்றி
உமையவள் மகனேபோற்றி
காமனையெரித்தயீசன்
மைந்தனே போற்றிபோற்றி
வாமனரூபமான
வைகுந்தவாசன்மேல்பாட
தாமதமில்லாக்கணபதி
சபைதனில்வருகின்றாரே.

### விநாயகர் வருகிற தரு.

வல்லபைகணபதி வந்தார்
சிவன்மைந்தன் வல்லபை

வல்லபைக்கணபதி வாழ்ந்திடுங்குணபதி
ஆனைமுகமிலங்க அழகுபுஜம்துலங்க
சேனைதளங்கள்சூழ திருவடிபாதம்துலங்க வல்ல

தண்டையம்கடகமாட தாளமத்தளம்போட
அண்டையில்மாதராட அழகாய்வெண்சாமரைபோட வல்ல

வேலருக்குமூத்தோன் வீதியில்நின்றுகாத்தோன்
பாலும்பழமுமுண்போன் பாதையில்வந்தமர்ந்தோன் வல்ல

### சரஸ்வதி துதி விருத்தம்.

அரிவோம்நன்றாகவென்று
அன்னைசரஸ்வதியேபோற்றி
குருவாழ்ககுருவே துணையென்று
குரித்தவுன்மலர்தாள்போற்றி
வரும்வழிதன்னைப்பார்த்து
வாடியேபாலர்நாங்கள்
திருவடிதன்னைக்காண
சிந்தித்துபோற்றினோமே.

### மகாவிஷ்ணு துதி தரு.

வாரும்அரிகரியே வைகுந்தத்துக்கதிபதியே வாரு
காரும்அரிகரி வைகுந்தமேகதி
சேரும்பெருகிடக் காரும்முரகரி வாரு

அரியேதிருமாலே ஆதரியும்பெருமாளே
பெருமையுங்கீர்த்தியை புகழ்ந்துதோத்தரித்திட வாரு
சங்குசக்கரபாணி சரித்திரமேபூணி
வெங்கிளைகார்த்திட யிவ்வேளைவரவேணும் வாரு
சிங்காரமாய்நீரும் தேவன்செருடநேரி
பங்கயக்கண்ணனே பாலனைகார்த்திட வாரு
திருப்பதிநகர்தன்னில் தேவன்திருக்கூத்தை
பொருப்புடனேபாட புண்ணியனேவாரும் வாரு
வைகுந்தவாசரே மனதில்குடியாக
செய்யும்நாடகத்திற்கு னிந்தையொன்றணுகாமல் வாரு
ஆழ்கடலுலகெங்கும் அமர்ந்தபெருமானே
அடியேன்செய்பிழையெல்லாம் அபசாரம்பொருத்துமே வா

பலராமர் கவி,

பாரியமுடிகளுமே பளபளென்ன
அணிந்தபட்டாடையுமே தகதகென்ன
பாதமதில்வண்டையது கலகலென்ன
பலவரிசைதன்னுடனே செங்கோலேந்தி

கிருஷ்ணமூர்த்தி கவி,

சீரியேதானெழுந்து கிருஷ்ணமூர்த்தி
சிந்தையுள்பலபணிகள் சீராய்பூண்டு
சூரியதோர்மாதுவின் தயையால்வந்து
குணமுடனேதிருநடனம் புரிந்துநிற்க

பலராமர் கவி.

சரியாய்விசாரணை புரிந்திட
சகலரும்வந்துகை கட்டிநிற்க
சப்தசாகரமு மதிர்ந்துமேவிழுந்ததாய்
சகலஅந்தணர் வேதகோஷ்ட்டங்கள்பாட

கிருஷ்ணமூர்த்தி கவி.

பேரிகைமுரசுடங்கா மல்லரிதுத்தாரி
வீரசின்னங்களுதிவரவே
பிடிபடாவாத்தியம் கடலொலிபோலவே
பிரசண்டகோதண்ட உத்தண்டனெழுந்தார்

பலராமர் கவி,

பாராளரெண்ணியே பலராமரோடி

கிருஷ்ணமூர்த்திகவி.

சிராஜகிருஷ்ணரும் சிந்தையாய்நாடி

பலராமர் கவி.

தாராளமாகவே சபைதனைத்தேடி





பலராமரும் கிருஷ்ணமூர்த்தியும்

வருகிற தரு.

பலராமர்அரிகிருஷ்ண பலபணிஅலங்கரித்து
கலகலென்றுதண்டையாடவே கனகசபைவாரார் பல

அண்ணன்தம்பியிவர்கூடி அரசுசெங்கோல்தான்புரிய
மன்னர்மன்னர்வந்துசூழ மாளிகைவிட்டுவாரார்பாரீர் பல

கெருடகொடிபறக்க செந்திருவர்முன்னடக்க
திருடனானகிருஷ்ணன்கூடி சீர்சபைக்குவாரார்பாரீர் பல

வீரகர்ணன்சிசுபாலன் வெத்தியுள்ளசாம்புவந்தன்
தாரையுடன்பூரிபாட சகலபேரும்வந்தனரே பல

தேசவிசாரணை.

பலரா பிர்மாலயம்விஷ்ணுவாலயம் சிவாலயம்
மூன்றுகாலமும்பூசை செவ்வையாய்நடந்துவருதா

கிருஷ் சொற்படியேஉமது கடாட்சத்தால்தேர்திருவிழா
தினந்தினம்நடந்துவருகின்றது அண்ணா

பலரா அந்தமாவேதியர் அவரவர்கள்நேமநிஷ்டை
அநுதினமும்செய்கின்றனரா

கிருஷ் உந்தனிடமொழிப்படிக்கி அவரவர்
உண்மையாய்நடக்குறார் அண்ணா

பலரா இன்பமாய்நமது தேசத்திலுள்ளகுடிகள்
இடுக்கமில்லாமல் வாழ்கின்றாறு தம்பி

கிருஷ் துன்பமில்லாமலே அவரவர்நமதுகிருபையால்
சுகமாகவாழ்கின்றார் அண்ணா

பலரா நீதியின்படியேநமது ராச்சியமெல்லாம்
நிகரில்லாமல்இருக்கின்றாரா தம்பி

கிருஷ் ஓதியபடியே நமதுராச்சியமெல்லாம்
ஒருகுறைவுமில்லே அண்ணா

பலராமர் சொல் வசனம்.

கேளுந்தம்பி நமதுராச்சியம் சுபேட்சமா யிருக்கின்றபடி யால் அதிக சந்தோஷமடைந்தேன் நம்மைப்போலொத்த ராசர் கள் ஆளப்பட்ட சிமைகளெல்லாம் அவருடைய க்ஷேமங்களை அறியவேண்டியிருப்பதால் நாமிருவரும் இன்றுராத்திரியில் சென்று அந்தந்த தேசங்களைப் பார்த்துவருவோம் வாரும்தம்பி கிருஷ்ண மூர்த்தியே.

பலராமர் சொல் தரு.

தேசங்கள்பார்க்கவே ஆசையாயிருக்கு
சிராய்நடந்துவாரும் தம்பி

கிருஷ்ணமூர்த்தி சொல் தரு.

கூசமில்லாமலே ஆசையாயிருக்குது
கூடநடந்துவாரும் அண்ணா

பலராமர் சொல் தரு.

ஆசையுடனேவந்து அழகுள்ளதேசமிது
ஆருதுசொல்லும்என் தம்பி

கிருஷ்ணமூர்த்தி சொல் தரு.

வாசங்கள்செய்திடும் வாதாபிஎனதாபி
வாழ்ந்திடும்தேசமது அண்ணா

பலராமர் சொல் தரு.

அச்சமில்லாமல் வாழும்சிமையது
அதையெனக்குறைசெய்யும் யென்தம்பி

கிருஷ்ணமூர்த்தி சொல் தரு.

சொச்சிதேசமிது குடகுதேசம்பாரும்
குரிப்பாகக்கண்டிடும் எனண்ணு

பலராமர் சொல் தரு.

வச்சிரமாளிகை கட்டியேவாழ்ந்திடும்
மன்னவனூர்சொல்லும் என் தம்பி

கிருஷ்ணமூர்த்தி சொல் தரு.

பச்சதேசமாளும் விலாடபூபன்
மாளிகையிதோபாரும் எனண்ணு

பலராமர் சொல் தரு.

சத்துமஞ்சாமலே சித்தமகிழ்ந்திடும்
தேசமெதுசொல்லும் தம்பி

கிருஷ்ணமூர்த்தி சொல் தரு.

ஒத்துமையாகவே வாழ்ந்திடும்ஐவர்கள்
உபலாவியபட்டணம் எனண்ணு

பலராமர் சொல் தரு.

தாண்டியேவந்தோமே சதுரானதேசமெல்லாம்
தனிதேசமாறுது தம்பி

கிருஷ்ணமூர்த்தி சொல் தரு.

தூண்டியேகோபத்தால் துடிக்கஉயிர்வாங்கும்
பாண்டியதேசமிது அண்ணு

பலராமர் சொல் தரு.

ஏழைகுடிகளெல்லாம் தாழ்வில்லாமல்வாழும்
எந்ததேசமிது என் தம்பி

கிருஷ்ணமூர்த்தி சொல் தரு.

சோழதேசராசர் ஆண்டபூமியிது
சொல்லிவந்தேன்பாரும் அண்ணு

பலராமர் சொல் தரு.

பொருந்தியகாற்றினல் வாடைகள்வீசும்
இருந்துபோகலாம்என் தம்பி

கிருஷ்ணமூர்த்தி சொல் தரு.

திருவத்திமலைமீதில் பொருந்தியேயிருக்கலாம்
சீராய்கடந்துவாரும் அண்ணு

பொது வசனம்.

இந்தப்பிரகாரமாக கிருஷ்ணமூர்த்தியானவரும் பலராமரும் திருவந்திமலைமீதிலிருந்து இளைப்பாறி யிருக்கின்றபோது பலராமர் கிருஷ்ணமூர்த்தியைபார்த்து சொல்லுகிற விதங்காண்க.

பலராமர் சொல் விருத்தம்.

தம்பியேசொல்லைக்கேளாய் சனிவாரம்பிறந்துபோச்சு
கும்பலாயிருவர்கூடி குணமுடன்யெண்ணைவிட்டு
சம்பிரமாய்ஸ்நானஞ்செய்ய சலமதுகிடைக்கக்காணோம்
தென்புள்ளகெருடன்தன்னை சீக்கிரம்வரச்செய்வாயே.

வசனம்.

வாரும் இன்றுராத்திரி பதினைந்துநாழிகை ஆய்விட்டபடியால் சனிவாரம் பிறந்துவிட்டது நாமிருவரும் எண்ணையிட்டு ஸ்நானஞ்செய்யவேண்டியிருப்பதால் இவ்விடத்தில் ஜலம் கிடைக்காதபடியால் கெருடனைக் கொண்டுவரும்படிச் செய்யவேண்டும் ஆகையால் எனது வாகனமாகிய கெருடனை யழைப்பியும் தம்பி கிருஷ்ணமூர்த்தி.



கெருடன் சொல் விருத்தம்

இந்தமொழிதன்னைக்கேட்டு எழுந்துமேகெருடன்தானும்
அந்தமாயலங்கரித்து ஆடைகள்பரிமளிக்க
எந்தனையழைத்தசேதி யென்னமோயரியேயென்று
நந்தகோபாலர்முன்னே நாடியேவருகின்றாரே

கெருடபகவான் வருகிற தரு.

சித்திரப்பதுமைபோலே
திரேகம்பளபளென்ன

செங்கெருடனும்நானே ஸ்ரீகிருஷ்ணதேவர்
பேரும்வாகனம் நானே
வைத்திழைத்தப் பணிகொஞ்ச
வானவர்தேவர்களஞ்ச வாடைபரிமளிக்க சித்தி

சிங்கைதமனங்களித்து திரேகம்பரிமளித்து
தேடியேவந்தேனே அரிபாதத்தைத் நாடியேவந்தேனே
நந்தகோபாலர்நம்மை நாடிஅழைத்ததென்ன
நாடிஅவர்பாதமதை தேடிஅரிவோமென்று சித்தி

முத்துபதக்கமின்ன மூடியும்பளபளென்ன
மோகனப்பணிகள்துன்னவே வேடிக்கையாக மோ

எத்திசையுநடுங்க எமகிரியுமொடுங்க
சுத்திலும்மாதர்களாட சொகுசாய்தாளங்கள்போட சித்தி

எங்கும்பிரகாசிக்க யேமனுமதிசயிக்க
எழுந்துயிதோவந்தாரே கெருடதேவன் பெ

அங்கமதில்திருநாமம் பொங்கமுடன்துலங்க
மங்களமாகவேயிவர் மாயன்சபையைதேடி சித்தி

கெருடபகவான் சொல் ஐம்பை.

சங்குசக்கரம்யேந்துங்கையா சாரங்கபாணியே
எங்கும்நிறைந்தமாலே யேகவண்ணசருணம்
சங்கதியையெந்தனுக்கு சாற்றுவீர்தேவா
மங்கைலக்ஷிமியே மாயகிருஷ்ணதேவரே
எங்கும்நிறைந்தமாலே யேகவண்ணசருணம்
உந்தன்திருபாதத்தை உண்மையாய்தொழுதுநின்றேன்
இந்தமலைமீதில்நீங்கள் இருவருமாய்வந்ததென்ன
எந்தனுக்குவிபரமாக வந்ததையுரைப்பீர்

கெருடபகவான் சொல் வசனம்.

சருணம் சருணம்கர்த்தனே இந்தமலைமீதில் என்னையேது காரணமாக அழைப்பித்தீர் அதை இன்னதென்று திருவுளம்பற்றி யருள்செய்ய வேண்டுமையா சுவாமி.

கிருஷ்ணமூர்த்தி சொல் வசனம்.

வாருமப்பா கெருடா இன்றையதினம் சனிவாரம் பிறந்த படியால் நாம் ஸ்நானம்செய்யவேண்டியிருப்பதால் ஜலங்கொண்டு வாருமப்பா கெருடனே.

கெருடன் சொல் தரு.

அடிக்குள்ள அண்டமெல்லாம் நொடிக்குளறிவேனென்று
அதிரவேதானடந்தான்கெருடதேவன் அதிரவேதானடந்தான்
திடுக்கிடதேவரெல்லாம் முடுக்குடனேயெழுந்து
சிரியேதானடந்தான் கெருடதேவன்சிரியேதா
எத்திசைரிஷிமுனிவர் தத்தியேபறந்தோடிட
எதிராகண்டந்தானே கெருடதேவன்எதிரா
காசிநதிதன்னைக்கண்டு கனத்தமகிட்சிகொண்டு
காலனைப்போல்வந்துநின்றார் கெருடதேவன்காலனைப்
கோரமானமூக்கைநீட்டி ஆருபோலத்தான்கிழித்து
குண்ணருகில்வந்துவிழுந்தான் கெருடதேவன்குண்

பொது வசனம்.

இந்தப்பிரகாரமாக கெருடபகவான் காசிநதியைக்கண்டு மூக்கினால்கிழித்து சுவாமியிராநின்ற மலையருகில் மூர்ச்சையாய் விழுந்துஇருக்க அந்தசமயத்தில் கெருடன்போனவனைக்காணோமென்று பலராமர் கோபித்துச் சொல்லுகிற விதங்காண்க.

பலராமர் சொல் கவி.

அப்பனே தம்பிகேளாய் அனுப்பினோம்அவனைக்காணோம்
சர்ப்பமாயிருக்கும் ஆதிசேஷனைவரச்செய்வாயே

வசனம்.

கேளுந்தம்பி ஜலங்கொண்டுவரப்போன கெருடன் இன்னம் வரக்காணோம் நாம்வந்து வெகுநேரமாய்விட்டது நாகேந்திரனுயிருக்கப்பட்ட ஆதிசேஷனை வரச்செய்யும் தம்பி.

கிருஷ்ணமூர்த்தி சொல் கவி.

செப்பியபடிக்குயானும் சிந்தையில்துயரங்கொண்டு
தப்பிதம்வாராமுன்னே சடுக்கெனவரச்செய்வாயே

வசனம்,

கேளும் எனது அண்ணாவே உன்மனதின்படியே ஆதிசேஷனை அழைப்பிக்கிறேன் அண்ணாவே.

## ஆதிசேஷன் சொல் விருத்தம்.

எத்திசைநடுநடுங்க யெமகிரிதத்தளிக்க
கத்தியும்பிண்டிபாலா கைதனில்பிடித்துக்கொண்டு
சத்தியேநாகசேனை சூழ்ந்துகொண்டாடயென்னை
சத்தமுங்கலகலென்ன ஆதிசேஷனும்வருகின்றானே.



## ஆதிசேஷன் சொல் தரு.

வந்தானே ஆதிசேஷன் பாரீர்நல்ல
வாகனகெருடனேரும்; அரியினிடசிஷன் வந்

இந்திராதிதேவர்களும் வாடநல்ல
இழையானபட்டாடை பணிகளுமேயாட
சத்திலும்மாதர்க ளாட
சொகுசுடனேதாள மத்தளங்களும்போட
கட்டாரிசிலைவாளு மேந்தநல்ல
கண்டவர்திடுக்கிட ஓட அந்த
எண்டிசைபுவனமு மதிக்க நல்ல
இந்திராதிதேவர்களும் வந்துமேதுதிக்க
செந்தாமரைக்கண்ணன் பாதம்தேட
தேடியேதுறுசாகவே யோடிநாடினான் வந்

ஆதிசேஷன் சொல் தரு

சுவாமியேநீங்களிந்த மலைமீதில் அய்யா
சரியாகவந்ததென்ன அதையுரைப்பீர்மெய்யா
இஷ்டம்வைத்ததுயென்ன அரிகேசா சுவா
அதையின்னலேயெந்தனுக்கு உள்ளமுமகிழவே
கன்னமில்லாமலே சொல்வதுசரி சுவாமி

பலராமர் சொல் தரு.

சொல்வதுமென்னஆதிசேஷா நீர்கேளும்
துரிதமாய்கானகம் சென்றுநீயும்
அல்லலடைந்திடாமல் கல்லஜலங்கொண்டுமே
அரைநிமிஷத்தில்வாரும் ஆதிசேஷா சொ

ஆதிசேஷன் சொல் தரு

அய்யாநான்சருணம் மெய்யாவுன்திருவடிக்கி
அறிந்துநான்வாரேனைய்யா அரிகேசா
வையகந்தனிலே வழிபார்த்துநானும்
வகையறிந்துவாரேனைய்யா அரிகேசா
மன்னவன்கெருடன் வந்திடுமுன்னே
யின்னகர்தனிலே சொன்னதுபோல்வாரேன்

பலராமர் சொல் தரு

சித்தங்கலங்காமலே தேடிநீயும்பார்த்து
உத்தமதையெந்தனுக்கு உரைப்பாய்நீ ஆதிசேஷா
சித்தங்களிக்கவேநான் தேடிநதிகள்சென்று
தீர்த்தங்கொண்டுவருவாய் ஆதிசேஷா சுரு
தேவகபோதா ஆக்கினைதூதா
சாக்கிறதையுடனே சீக்கிரமாக சித்

பலராமர் வசனம்.

கேளும் ஆதிசேஷா. நீ அதிவேகமாகச்சென்று ஜலங்கொண்டு வாருமப்பா ஆதிசேஷனே.

ஆதிசேஷன் சொல் தரு ஜொண்டிச்சிந்து.

சண்டப்பிரசண்டமுடனே ஆதிசேஷனுமெழுந்துவெகுரோஷத்துடனே மண்டியிட்டுசினமீறிமீசைபடபடவென்றுமேதான்துடி

படமதைதான்விரித்து பூமியில்பாய்ந்துமே போரடியாய்தானடிக்க இடமதுதான்கொடுத்து பூமிதேவியுமோடியே பதுங்கினளே திடுக்கெனதானெழுந்து கெங்கைஜலமதுபுரளவே வந்தானேமூடிக்குடன் தானெழுந்து களிப்புடன் முன்னமேவந்து நின்றான் தன்னுடனே.

பொது வசனம்.

இந்தப்பிரகாரமாக ஆதிசேஷன் மலையைக்குடைந்து ஜலங்கொண்டுவந்துவிட அந்தசமயத்தில் கெருடபகவான் மூர்ச்சைதெளிந்து கிருஷ்ணமூர்த்தியை நினைத்து துதிசெய்கிற விதங்காண்க.

கெருடபகவான் சொல் தருஜம்பை.

ஆசையாகசென்றுநானும் அலைந்துழன்றனே அரி அரி
அலைந்துழன்றனே
காசிநதிதன்னைக்கண்டு களிப்படைந்தனே ஆ
மோசம்வராமுன்னம்நானும் மூக்கினால்கிழித்து அரி அரி
முன்னேகொண்டுவாராநானும் முயர்ச்சிகொண்டேனே
பச்சைநிறமேனியனே பலர்க்குமெய்யனே அரி அரி
இச்சைவையும்யெந்தன்மீதில் யெழுந்துவாரவே
நாராயணா அரிகோவிந்தா னந்தகோபாலா அரி அரி
சீராயெநதன்மீதில்யோ சிந்தையில்லையோ

கெருடபகவான் சொல் வசனம்.

அரிகரி ஸ்ரீமன்நாராயணா உமதுகிருபையால் காசிநதியைக்கண்டு மூக்கினால்கிழித்து இந்தமலைபருகில்வந்து விழுந்தேன் இந்த வேளை களைதெளியும்படி கண்பாருமையனே.

பொது விசனம்.

இந்தப்பிரகாரமாக கெருடபகவான் காசிநதியைக்கண்டு மூக்கினால்கிழித்து இந்தமலைபருகில் சுவாமி முன்பாக கொண்டுபோகவேண்டுமென்று எண்ணங்கொண்டுவருகையில் சுவாமியிருக்கும் மலைக்குப் பின்னால் வந்துவிழுந்து களையினால் தோத்தரிக்க கிருஷ்ணபகவான் ஞானதிருஷ்டியினாலறிந்து ஞானமந்திரத்தையுச்சரிக்க அப்போது கெருடனெழுந்திருந்து சொல்லுகிற விதங்காண்க.

கெருடன் சொல் கந்தார்த்தம்.

திடுக்கிடதேவரெல்லாம் கிருஷ்ணர்மனங்களிக்க
அடுக்குள்ள அண்டமெல்லாம் அலரிபெயிழுந்தாப்போல

சடக்கெனயெடுத்தானப்போ ஜலம்கொண்டுபோக
முடுக்குடனெழுந்திருந்து சுவாமிமுன்போக

கெருடாள்வார்சொல் தரு.

துடுக்குடன்தானெழுந்து கிருகிறென்று
சுவாமியிடந்தன்னருகில் வந்துநின்றுதாம்
கடுகடுத்து முகம்வாடாதே யென்றுசொல்லி
கண்டுகொள்வாயிது காசிநதியென்று

பொது வசனம்.

இவ்விதமாக கெருடன் காசிதீர்த்தங் கொண்டுவர அந்தசமயத்தில் ஆதிசேஷன் மலையைத்துளைத்து ஜலங்கொண்டிருப்பதை கெருடபகவான் கடூரமாகியகோபமாய் வருவதைக்கண்டு கிருஷ்ணமூர்த்தி கையைக்காட்டி கோபத்தைத்தணிக்க அந்தசமயத்தில் ஆதிசேஷன் கோபமாக கெருடபகவானைப்பார்த்து சொல்லுகிற விதங்காண்க.

ஆதிசேஷனுக்கும் கெருடனுக்கும் தர்க்கம்,

ஆதிசேஷன் சொல் கவி.

செஞ்சிலம்பலைசையுங்காலும்செங்கெருடாநீயுங்கேளாய்
சஞ்சலம்வந்ததென்ன சலங்கொண்டுவரயின்னேரம்



வசனம்.

அகோ வாருங்கெருடனே எனக்குமுன்னே ஜலங்கொண்டு வருவதாகப்போனாய் நானுனக்குப்பின்னால்வந்து மலையைத்துளைத்து ஜலங்கொண்டுவந்தேன் இன்னேரம் என்னசெய்தாயடா கெருடனே.

கெருடன் சொல் கவி.

அஞ்சியேசொல்வேனிப்போ அறிவுகெட்டவனேசேஷாய்
மிஞ்சியேகோபத்தாலே யீட்டியால்வாட்டுவேனே

வசனம்.

அடாவாடா நாகேந்திரா நீயென்னா சமர்த்தனாகப் பேசவந்தாய் வுன்கெர்வத்தை அடக்குறேன் பாரடா ஆதிசேஷா.

ஆதிசேஷன் சொல் தரு.

கெருடனேவாடாஉனக்கென்ன கெம்பீரமோடா
திருடனைப்போல்வந்து திகைத்துநீபேசுறாய்
தீரமாகவந்தேன் மாரியடிக்கயுன்னை கெரு

கெருடன் சொல் தரு.

சேஷனேவாடா வெகுரோஷனேபோடா
தாழுவேஉன்முடி தரிப்பட்டோடுமே
வாழ்வைப்பரிக்கவே வந்தேனேயிப்போது சேஷ

ஆதிசேஷன் சொல் தரு.

அறிவுண்டாவாடா உந்தன் ஆண்மைகள்போரை
தெரியுதேயிப்போது தீரத்தின் ஆண்மைகள்
மரியாதையோஉனக்கு மடையனேநீபோடா-அறிவு

கெருடன் சொல் தரு.

சோம்பேறிமூடாபோடா சோராமல்வெதிராகவாடா
பாம்பாகப்பிறந்தவன் வீம்பாகப்பேசுறாய்
சாம்புத்தடியாலே சதைக்கவதைக்குறேன் சோ

ஆதிசேஷன் சொல் தரு.

வல்லமைபேசவந்த வார்த்தைகானறிவேன்
வாட்டியேயடிப்பேன் வீரங்காட்டியேயடிப்பேன்

போட்டிகள்காட்டி நீ மூட்டிநாய்சண்டையை
வாட்டியேயடிக்குறேன் வல்லமைபாரடா வல்

கெருடன் சொல் தரு.

வல்லமைகூறிவந்த ஆதிசேஷனே உன்னை
வாட்டியேபாணத்தை பூட்டியடிக்குறேன்பார் வல்

ஆதிசேஷன் சொல் தரு.

நில்லுமென் றுவந்துகுதித்தேன் நானுந்தன்மீதில்
வல்லமைகண்டறிய வாதுகள்செய்தேன் நில்

கெருடன் சொல் தரு.

சொல்லும்வாயைமூடுமுன்னே துடுக்காஉந்தனுக்கறுக்க
சூக்ஷமாகபாணம் சுருக்காகவிடுத்தேன் சொ

ஆதிசேஷன் சொல் தரு.

பாருமென்றபோதே யிப்போபதைபதைக்கஉந்தனுடலமும்
தாருமாறுகயுந்தனைநான் சாகக்கொல்வேன்பாருமென்றுன்

கெருடன் சொல் தரு.

என்னிடவலுமைபார்க்க யேகிடாயுன்னாலாமோ
மன்னவாகிருஷ்ணதேவர் மனதினில்மகிழ்ந்திருக்க என்

கெருடன் சொல் தரு.

மாட்டியேயடித்தேன் வீரங்காட்டியேமடித்தேன்
கோட்டிபோட்டிகாட்டி காட்டினேன்தீட்டி
கூட்டியேயுந்தனை வாட்டிடசெய்குவேன்மாட்

ஆதிசேஷன் சொல் கவி.

அன்னவர்யுந்தன்பங்கில் அரிகிருஷ்ணர்யிருந்தாயின்ன
என்னுடைய வலுமையால்கட்டி

ஆதிசேஷன் சொல் தரு.

ஏகவேயடிப்பேன்இருவர்மனமும் நோகவேயடிப்பேன்
போகவேஉயிரது பிடிக்கநமனும்வந்திட
நோகவேகாலனும் நொடிதனில்பிடித்திட ஏக்

பொது வசனம்.

இவ்விதமாக ஒருவர்க்கொருவர் சண்டைசெய்திருக்கும்போது கெருடனுனவன் கிருஷ்ணமூர்த்தியிருக்கிறப்போது எனக்கு யென்னடயபேச்சுசொல்ல அந்தசமயத்தில் கிருஷ்ணமூர்த்தியானவர் அதிக கோபத்துடன் சொல்லுகிற விருத்தாங்கம்.

கிருஷ்ணமூர்த்தி சொல் கவி.

அடிக்கடிசபதங்கூறி அஞ்சாமலடிப்பேனென்றாய்
துடுக்குடன்கோபமாகி துள்ளியேவருகின்றாரே

கிருஷ்ணபகவான் சொல் தரு.

சக்கரம்வாள்கையிலெடுப்பேன் அவன் தலையை
அரிந்துதானும் விடுப்பேன்
பக்குவமரியாமல் பதரியேபேசினான்
பாவியிவனுயிரை ஆவிபதரச்செய்வேன் சக்க

பலராமர் சொல் தரு.

பதராதேதம்பியேகேளும் பாலன்சொன்னசொல்லை
மனம்பொருத் தாளும்
சிதரவேசெய்வது சிரப்பதுநமக்காமோ
சீராகவெந்தன்முகம் பாராய்நீயிப்போது பத

கிருஷ்ணமூர்த்தி சொல் தரு.

பொல்லாதவார்த்தைகள்பேசினன் ஆதிசேஷன்
போமென்றுதடுக்காதே யெனண்ணா
யெல்லாம்தெரிந்தும் யெனக்கெடுத்துரைக்குநீர்
நில்லாதேயென்முன்னே பொல்லாதகோபம்வரும்

பலராமர் சொல் தரு.

இருவரையொன்றாய் பாரும்
இனிவரும்பிழைகளை நீயுமேகூரும்
பெருமையரியாமலே பேசியேவிட்டானே
அருமையாய்நம்மிடம் அடிமைபடவாச்சே இரு

கிருஷ்ணமூர்த்தி சொல் தரு.

அப்படியவன்சொல்லலாச்சா நமக்கு
அடிமையானபின்பு யினியென்னபேச்சா
யெப்படிசொல்லுவான் யெண்ணிப்பாராமலே
அப்பவேயவனையும அதம்செய்துபோடுவோம் அப்

பலராமர் சொல் தரு

நம்மையேநம்பிவிட்டான் அவனை
நடத்தையரியாமலே கெத்திகெட்டான

கும்பலாயிருந்து கூடிநால்லாபழுண்டு
தம்பினிதானித்து தயவாய்பொருத்திடு கம்ம

கிருஷ்ணமூர்த்தி சொல் தரு.

அண்ணனார்மொழியைக்கேட்டு அடங்கியேகிருஷ்ணதேவர்
குண்ணியேமனதுவாடி கோபத்தைதான்தணிந்து
பண்ணியதபத்தால்கெருடன் பரந்திடநிழல்பட்டாலே
மண்ணினில்வீழ்ந்துசேஷன் மரணமுமடைகுவானே.

வசனம்

கேளுங்கெருடனே உன்னை அபிமானஞ்செய்த ஆதிசேஷ னுக்கு சாபங்கொடுத்தேன் அது யென்னவென்றால் நீ ஆகாயத் தில் பறக்கிறபோது உன்னுடைய நிழல்பட்டவுடன் இறந்துபோ வான் உன்மனதின்படி பறந்துக்கொள்ளும்.

பொது வசனம்.

கிருஷ்ணமூர்த்தியானவர் யிவ்விதமாக கெருடனுக்குச்சொ ல்லியிருக்கும்போது அந்தசமயத்தில் பலராமர் யெண்ணையிட்டு நீராடவேண்டுமென்று யோசித்து அரப்புகொண்டுவருவார் பா ரென்று மனதில் கிலேசமாகவெண்ணி தம்பியைப்பார்த்து சொல் லுகிறவிதங்காண்க.

பலராமர் சொல் வசனம்.

வாரும் யெனதுதம்பி யெண்ணையிட்டு நீராடவேண்டும் ஆ னதால் கானகம்சென்று அரப்புக்கொண்டுவாரும்தம்பி கிருஷ்ண மூர்த்தியே.

கிருஷ்ணமூர்த்தி சொல் கந்தார்த்தம்.

என்னை நீயாளுமாக யெண்ணியேசொன்னதாலே
டன்னியகோபத்தோடு பார்த்துமேயுரிகிநெஞ்சம்
உன்னிடமுகத்தில்காணும் யொருநாளுமுழிக்கேனென்று
சொன்னதோர் மொழியைக்கண்டு

கிருஷணமூர்த்தி சொல் தரு.

துடுக்குடன் தானெழுந்து கிருஷ்ணதேவர்
தூக்கியேமலைமேல்காலை வைத்திடவே
அடுக்குகள் மலைகளெல்லாம் கலங்கிட
அலைந்துகுலைந்துமலை சாய்ந்திட
திடுக்கெனதான்வாங்கி சாத்திட
திருப்பதிமலைமேல் வைத்திட

முடிக்குடன் தானெழுந்து தேவர்களெல்லாம்
முன்னேயோடிவந்து தன்னருகேநிற்க நடு

பொது வசனம்.

கிருஷ்ணமூர்த்தி அன்னன்பேரில் கோபித்து அண்டரெண்டங்கள் கத்தளிக்க ஓர்காலே தூக்கி கசரிமலேமேல்வைத்து அந்த மலேசரிந்து ஓடக்கண்டு காலேவாங்கி திருப்பதிமலேமேல்வைத்து நாம் யிருப்பதற்கு நல்லயிடம் யிதுவேசரியென்று திருப்பதியென்று நாமதேயமிட்டு யிருக்கின்றபோது அந்த சமயத்தில் கெருடபகவான் ஆதிசேஷன்பேரில் கோபமாகி சொல்லுகிரவிதங் காண்க

கெருடபகவான் சொல் தரு சமா.

அண்டரண்டங்கிடுகிடென்ன அதிரப்பறக்குறான் கெருடன்
அதிரப்பறக்குறான்
ஆதிசேஷன்யெங்கேயென்று வருகிறான்
அவனதட்டிவருகிறான்
மண்டலத்துதேவரெல்லா மதித்துவாடவே
யென்னேதுதித்து ஓடவே
மடையன்யெங்கே போனானென்று
மரித்துத்தேடியே அவனே
குரித்துத்தேடியே
எந்தனேக்கண்டுயெளிதமாக யெண்ணிப்பேசினான்
மனம்குன்ன வீசினான்
எங்கேபோனா னென்றுசொல்லி
பேசிவருகிறான் கையை
வீசிவருகிறான்
எந்திடத்திலிருந்தாலவனே எங்கிப்பிடிப்பேனே
மா... மதேங்க யடிப்பேன்
என்னிடமிழல் பட்டவுடன்
எரிந்துபோவானே பனம்

ஆதிசேஷன் சொல் தரு.

இந்தமோடிசெய்யலாகுமோ கோபாலகிருஷ்ணு
நான்சின்னதகொந்து வாடப்போகுமோ
எந்தன்மனமரிந்து யிஷ்டந்தனேத்தெரிந்து
மந்திகெருடனுக்கு வரமதுகொடுத்தாயே

என்னபுத்திவினைத்தாயடா கோபாலகிருஷ்ணா
எப்படிசெய்ய மனந்துணிந்தாயே
அன்னைதந்தையெனக்கு அடிமையே நானுனக்கு
அண்டியிருந்தவனை ரண்டகம்செய்திடலாமோ இ
பாருலகில்யென்னைகண்டால் கோபாலகிருஷ்ணா
பயந்துநடுங்கியே யோடுவார்
பெருங்கீர்த்திகளெல்லாம் பெருமையழிந்துபோச்சே
காருபலராமாவென்னை கர்த்தனேஉனக்கபயம் இ

பொது வசனம்.

இந்தப்பிரகாரமாக ஆதிசேஷன் பலராமரிடத்தில் அபயமெ ன்றுவிழ அதைக்கண்டு பலராமர் ஆதரித்து கெருடனைப்பார்த்து இவன் இருந்தால் சண்டைநேரிடுமென்று தம்பி போனவனைக்கா ணோமென்றுசொல்ல கெருடபகவானைப்பார்த்து வாருமென்று சொல்ல கெருடன் கேட்டுக்கொண்டுபோக பொழுதானது விடிந் துபோய்விட்டது தம்பியைக்காணோமென்று மயங்க அழுது அந் தமலையின்பேரில் பெருமாளாக அவதரிக்க அப்பால் கிருஷ்ண மூர்த்தி பொழுதுவிடிந்ததைக்கண்டு வெங்கடேசபெருமாளாக இருக்கிறபோது நகரிதேசத்தை ஆளாநின்ற அப்துல்காதர் மக ளானவள் பொழுது விடிந்து பதினைந்துநாழிகையாகி விட்டபடி யால் நாளுக்குநாள் பூஜைசெய்கிற வழக்கப்படி தாதியர் புடை சூழ கொலுவுக்கு வருகிற விதங்காண்க.



### கங்கை சொல் விருத்தம்.

சித்திரைப்பதுமைபோலும்சேயிழையானமாது
புத்தியிலுயர்வதாக புண்ணியவதியுமாகி
சுத்திலும்மாதர்சூழ்ந்து தொழுதமேசபையைநாடி
ரத்தினமயில்போல்மாது கங்கையும்வருகின்றாளே.

### கங்கை வருகிற தரு.

சித்திரப்பதுமைபோலும் சேயிழையானமாது
புத்தியிலன்பாக மெத்தவேயோசித்து
பூசைசெய்யவேவந்தாள் வெகுரஞ்சிதமாது
பூசைசெய்யவே நடந்தாள்
பித்துகள்தான்கொண்டு பேய்பிடித்தவள்போல்
பேதையதாகவே மாதுசிரோன்மணி சுரு
பெருமையுடனேயவள் அருமைமாதர்கள்
வெருமையதாகவே மருமம்பேசியே சித்தி
முத்துரவிக்கைதுன்ன மோகனமாலைகள்மின்ன
மொய்குழல்மாதுவந்தாள் கொலுவைநாடி மொ
பத்தியாய்மார்பினில் முத்துசரங்களாட
பாதத்தின்தண்டைகள் தாளாசப்தங்கள்போட சுரு
மங்கைசிரோன்மணி தொங்கியகரமதில்
கங்கணவளையல்கள் கைதனில்வீச சித்தி
முல்லையரும்புபோல் பல்வரிசைகளாட
நல்லமூக்குத்தியுடன்வந்தாள் மிகவடிவினிலழகிய
மல்லிகைமலர்சூடி மங்கையருடன்கூடி
மாதுசிரோன்மணி வந்தாள் சுரு
மத்தளதாளமும் துத்திசலுதிட
கைத்தாளவீணையும் மெத்தமுழங்கிட சித்தி
வயல்சூழ்மஞ்சநகர்தனில் வாழ்ந்திடும்வன்னியகுபாலன்
அரியாதவடமலை என்னும்சிலன்
வைகுந்தவாசகர்தன் மலரடியைத்துதித்து
செய்யும்கவிக்கிதங்கி சேஷனைக்கார்த்திடும் சுரு
வண்மையாய்விட சாஸ்திரங்கண்டுமே
கண்ணன்பேரில் கவியாகச்செய்தனன் சித்தி

வசனம்.

அடிவாடி சகிமார்களே வெள்ளுக்குவெண்ணெயைப்போல் எக்குநிறைந்திரானின்ற யேககாதனை கண்ணுக்குநிறைந்தகணவர் வரவேண்டுமென்று கடவுளைத்துதித்து பூசைசெய்வோம் வாருங்களடி தாதிமார்களே.

கங்கை சொல் தரு.

வாருங்களம்மா தாதிமார்களே
மலையேரிபூசை செய்வோம்
பாருங்கடி வனங்களெல்லாம்
பார்த்துபூசை செய்திடுவோம்
மல்லிகைமிருவாக்ஷி மரிக்கொழுந்துபாரிஜாதம்
முல்லையரும்பெடுத்து முடிந்துசரம்தான்தொடுத்து
நல்லஜலம்நீர்தெளித்து நன்றாகத்தரைமெழுகி
கல்லின்மேல்கோலமிட்டு கண்மூடிஜெபித்திடுவோம்
கயிலாசரைப்போல் கணவன்வரவேண்டுமென்று
ஒயிலாகப்பூசைசெய்து உண்மையுடன்தோத்தரித்து
நின்றிடவேவெதிராக நிருபமொன்றுயெழுதிகட்டு

பொது வசனம்.

இந்தப்பிரகாரமாக கங்கையானவள் பூசைசெய்திருக்கும் போது தாதியானவள் கங்கையைப்பார்த்து எவ்விதமென்று சொல்லுகிற விதங்காண்க.

தாதிகள் சொல் தரு.

பூசைமுடிந்துதேயம்மா போவோம்மெதுமனையம்மா-பூசை

கங்கை சொல் தரு.

ஆசை புனைக்கிலே அரனைத்துதிப்போமடி-ஆடை

தாதிகள் சொல் தரு.

இதுவேபயித்தியமம்மா யின்னோரப்வேதம்படித்தாயம்மா

கங்கை சொல் தரு.

மதிமயங்காதேவர்கூடி மகிழ்ந்திடதுதிப்பேன்போடி

பொது வசனம்.

அகோதெப்படி யென்றால் கங்கையானவள் ஒரே உறுதியாகப் பூசைசெய்து தாதிகளுடன் சம்வாதம் பேசிக்கொண்டு பூசைசெய்

திருக்கும்போது வெங்கடேசப்பெருமாளாக இராநின்ற கிருஷ்ணமூர்த்தி இவளிட உறுதியை அறியவேண்டுமென்று கோபாலராய் மாடுகளைமேய்த்துவருகிற விதங்காண்க.



இடையன் வருகிற தரு.

டேயலாரேடையோ டேயோ
டேயலாரேடையோ டேயோ

அண்ணமாரே தம்பிமாரே அடுக்காய்வாருங்கள்
இவளிருக்கிற மூடுக்கைப்பாருங்கள்
கன்றுகளைவொன்றாய்கூட்டுங்கள் காக்கும்பசுசிலைநாட்டுங்கள்
பெண்ணைநான்கண்டுவருகிறேன் அவளைபின்தொடர்ந்துநானும் [போகிறேன்

பொது வசனம்

இவ்விதமாக வெங்கடேசபெருவாளாயிருகின்ற கிருஷ்ணமூர்த்தி இடையனைப்போல் ருபங்கொண்டு மாடுகளை ஓட்டிக்கொண்டுமலையின்மீது வருகிறபோது நங்கையானவள் இடையனைப்பார்த்து பரிகாசம்செய்கிற விதங்காண்க.

நங்கை சொல் தரு.

சாதியரேயொன்றாய் சேருங்கள்
தவடையிலேரெண்டு போடுங்கள்

சேதியரியாமல் வந்தவன் யிவனை
தட்டுபட்டென்றுமே போடுங்கள் தாதி
சூதுசெய்யவந்தபாவியை யிவனை
தூரத்திபிடிப்போம் வாருங்கள் சூது

இடையன் சொல் தரு.

வாலிபமானயென்கண்ணே வந்திடுவாடெந்தன்பின்னே
பாலுகள்காய்ந்திடும்பெண்ணே பார்வதியாளிட அண்ணன
வேலைகளில்லையோவீட்டில் வந்தாலே
பாலுதயிர்வெண்ணெய் பசியாரவுண்ணலாம்
பக்ஷமாய்வாடி யெந்தன்மீதில்
இஷ்டமாய் நீரடி
கஷ்டமில்லாமலே கன்னியேயிருக்கலாம்
தக்ஷணம்நானுமே டட்சமாயிருப்பேண்டி வாலி

நங்கை சொல் தரு

காட்டுக்கொடிகளைபிடுங்கடி யிவனை
காலையுங்கையையுங் கட்டடி
பூட்டுத்தனையாக மாட்டுங்கடி
புரட்டிவிரட்டியிவனை உருட்டுங்கடி காட்

தாதிகள் சொல் தரு.

கூடிப்பிடிப்போம்நாம்வாரும் யிவனை
குறுக்கேமரித்திடுநீரும்
ஓடிப்போகுமுன்னேவாரும் யிவனை
உயிர்வதைசெய்தாலேதீரும் கூடிப்

இடையன் சொல் தரு.

இவளழகையென்னசொல்வேன் இவள்மனதைஎப்படிவெல்வேன்
பவழவாய்திறந்துபலுக்குவாய் பாவிமதன்கணையைவிலக்குவாய்
மாமன்மகளைப்போல் மருவியேயிருக்கலாம்
தாமதமில்லாமல் சந்தோஷமாகவே
தயவாகவாடிநான்மீதில் நயமாகத்தேவ
தாடகைபோலவே தடுத்துநீபேசாதே
ஏடாகூடமாகயிங்கே யெதிர்த்துநீபேசாதேடி இ

நங்கை சொல் தரு.

கானகத்தி யிடைப்பயலே இவனை
கசக்கிப்பிழியலாம் கையாலே
ஆணுவங்கொண்டு வந்தவனையிப்போ
கோலும்கம்பளியும் பிடுங்கடி
குடிமியைபத்தியே யிழுங்கடி
பாலுபல்லாவை யுடையுங்கடி
பஞ்சாபறக்கவே அடியுங்கடி

பொது வசனம்.

இவ்விதமாக கோபாலனுயிருந்த இடையனைப்பிடித்துத துரத்த அவர்மாய்கையாகவோடிட நங்கையானவள் யாரோவொரு இடையன்வந்து தன்னுடைய பதிவிரதாதனத்தை குலைக்கவந்தானென்று துக்கித்து புலம்புகிறவிதங்காண்க.

நங்கை புலம்பல் தரு

எந்தன்மீதில்யென்னகோபமோ ஒவைகுந்தவாசா
யீடழிக்கதாபமாகுமோ
உந்தனைக்காணஉண்மையானேனே ஒவைகுந்தவாசா
ஓடிவந்துகாரும்தேவனே
ஆரோஒருஇடையன்வந்துமே ஒவைகுந்தவாசா
அழும்பானவார்த்தைசொன்னானே
என்னசெய்வேன்ஏதுசெய்வேன் ஓவைகுந்தவாசா
இந்தவேளைவந்துகாருமே யெந்த

பொது வசனம்.

இந்தப்பிரகாரமாக சுவாமியைநினைத்து அழுதுக்கொண்டு இருக்கும்போது வெங்கடேசபெருமாளாக யிருக்கப்பட்டகிருஷ்ணமூர்த்திசோதிக்கிற விதங்காண்க.

வெங்கடேசபெருமாள் சொல் விருத்தம்.

எத்திசைமுனிவரெல்லாம் யெந்தனை துதிக்ககண்டேன்
கர்த்தனுமெழுந்திருந்து களிப்புடன்மணிகள்பூண்டு
உத்தமியிவளுமென்ன உண்மையாயிருக்கக்கண்டு
கர்த்தரும்காக்ஷித்தர கருத்துடன்வருகின்றாரே

வெங்கடேசபெருமாள் வருகிற தரு.

துஷ்டர்களையடக்கி சிஷ்டைகள்தான்புரியும்
திருவேங்கடராயர் கொலுசம்பிரமாக
திருவேங்கடராயர் வந்தார் து

மச்சவதாரமாகமாயன் சோமுகனைப்பிடித்து
வச்சையுடன்பிளந்து வெரிந்துவிண்டு
பிர்மதேவனையடித்தேன் அவன்வேதம்நான்கையுங்கெடுத்தேன் சு
பெத்துகொண்டுமே வைத்துகொள்ளவும்
பத்தியாகவே சித்தமகிழ்ந்து து

மாபெலிசக்ரவர்த்தி மதத்தையடக்கிவைத்தேன்
மாயமாகவே சென்றேன்
அந்தணருமிடத்தில்கேட்டேன் மூன்றடியிடம்
வாமனரூபமாகி வாழ்க்கையடைத்தேன்
வதைத்திடபட்டேன் மனங்கொதித்திடங்கொண்டேன் சு

வாடியே அவனுயிர்காட்டியே
நமக்குபோட்டியாகவே கூட்டியனுப்பினேன் து

தூணில்நரசிங்கமாக தொடுத்தேன் அவதாரம்
துஷ்டன்யிரணியனை தூக்கியேமகிழ்ந்தேன்
அவனுயிரைபோக்கியே மடித்தேன்
சாவனுன்பிரகலாதன் சஞ்சலங்களைத்தீர்த்தேன்
சாதகமாக வெகுபோதனையாக

சாஸ்திரவேதமும் சகலமும்தெரிய
சூஸ்திரமாகவே சுருக்குடன்போதித்தேன் து

ஏழுமலைக்கதிபன் யேகச்சக்ராதிபனாய்
எடுத்தேனவதாரம்பெருமாளாக கொடுத்தேன் தி[illegible]மாலை
வாழும்மன்னவர் வந்துகரங்குவிக்க
வந்தனம்புரிய அவர்நிந்தனையரிய சரு

வாதனையாகவே போதனைசெய்தேன்
சேதிகளறிந்திடும் சீதாராமனை து

பாலன்வடமலை பாடினகவிதன்னை
பார்த்துமனங் களித்தேன்
சந்தோஷமாக போற்றிவரமளித்தேன்

சாலோகர்வாழ்கிருஷ்ண துவரமியும்ரானரிந்து
சற்குணசீலன் வெகுநற்குணபாலன் சு
சந்தேகமொன் றுமில்லை யென்றுரைத்தேன்
வாகனமொன்று வைகுந்தரைத்துதித்தேன் து

வெங்கடேசபெருமாள் சொல் கந்தார்த்தம்.

அண்டமெலாமோரடியா யளந்தமாயன்
அலைகடலில்பள்ளிகொள்ளும் அமர்ந்ததேவன்
தொண்டர்களாதார்க்குமொரு வண்ணனகண்ணன்
துஷ்டர்களை மதமடக்கும் தேவகண்ணன்
குண்டலங்கள்செவியிலாட குலுங்கியோட
கூடிருந்தவண்டணியும் குழலாலாட
எண்டிசையும்பார்க்கவேதான் சங்குசக்ரமேந்தி



வெங்கடேசபெருமாள் வருகிற தரு.

வாராரேமாயவரும் பெண்ணைதேடிமலைமீதில்
நேராயோடி வாராரே
பாராயோஎந்தன்முகம் பச்சைதிருமேனியனே
கூராயுனதுமொழி நேராய்வசமளிப்பேன்

திருப்பதிமலைவாழும் திருவேங்கடதாசன்
மறைபொருளாகவந்த மாயகிருஷ்ணதேவரோடி-வாரு

வசனம்.

வாரும்பெண்களாநீங்கள்எந்தவூர் எந்ததேசம் இங்கேவந்து அழவேண்டியகாரணமென்ன அதைச்சொல்லுங்களடிபெண்களா

நங்கை சொல் தரு,

இவர்தாண்டியெந்தநாயகர் ஆ சகிமாரே
இவர்தாண்டியெந்தநாயகர்
எவருமரியயென்னை யிட்டுமணம்புரிந்த
ஏகபோகமாக யிருப்பாரடியம்மா இவர்
மையலதுகொண்டேனே ஆ சகிமாரே
மையலதுகொண்டேனே
மையலதுநான்கொண்டு தையலர்களைக்கண்டு
மருவியொருமுத்தம் தருவாரோவருவாரோ இவர்

வெங்கடேசபெருமாள் சொல் தரு

பேசுமொழிதனைக்கண்டு பிரியம்வைத்தாய்மனதுகொண்டு
ஆசையாகயென்னைக்கண்டு ஆணையுமென்றாய்மனதுகொண்டு
தாசியாளேயென்னைவந்து தழுவுமென்றாய்மனதுகொண்டு
கூச்சமுனக்கில்லையோடி கூருமென்றாய்வருவனோடி-பே

நங்கை சொல் தரு.

காணவென்றால்யெந்தனுக்கு கண்கள்மிகவும்கூசுதே
கதம்பம்பன்னீருவாடை களிக்கவேவீசுதே
பாணமும்யென்மேல்பாயுது பாய்ந்துமேயுன்மேல்தாவுது
எமன்கணைபொறுப்பேனோ காயத்தைவைத்திருப்பேனோ

வெங்கடேசபெருமாள் சொல் தரு.

துலுக்கர்குலப்பெண்களைநான் யெடுக்கவுஞாயமோ
தொட்டுயிழுத்தால்பழிபாவம் யென்னைச்சேருமோ
அடுக்குமோயென்குலமணியிருக்க ஆசையாகவந்திருக்க
வாய்மொழிகளும்போகுமோ வையகத்தில்பழிப்பாகுமோ-துலு

நங்கை சொல் தரு.

காசியிலுள்ளமன்னவரோ கயிலாசவாசவரோ
தேசத்திலுள்ளதொரு தெய்வலோகத்தரசரோ

ஆசையும்விஸ்வாசமோ அதிகமனம்கூசமோ
நேசம்என்மீதில்லையோ நீயெதுவோசொல்வாய்

வசனம்

இந்தப்பிரகாரமாக சுவாமியானவர் மனம்சோதிக்க நங்கையானவள் தான்செய்த தவத்தால் கயிலாசநாதனைப்போல் கண்ணுக்குநிறைந்த கணவனாகவுமிருக்கக்கண்டு ஒரேயுருதியாக சேரவாருமென்றுசொல்ல சுவாமியானவர் தடுத்துச்சொல்ல நங்கையானவள் யிந்த உயிரை விட்டுவிடுகிறேனென்றுசொல்லி மோகங்கொண்டகோபத்தால் விழுந்துகிடப்பதைக்கண்டு சுவாமியானவர் நங்கையைப்பார்த்து சொல்லுகிறவிதங்காண்க.

வெங்கடேசபெருமாள் சொல் தரு.

நங்கையேயென்முகம் பாராய்நன்றாய்
ஒருகண்ணால் நேராய்
பொங்கியேகோபத்தால் போவென்றுதடுத்தேனே
அங்கங்குளிரவேதான் சிங்காரமாய்வாரும் நங்
கையலதுகொண்டேன் பெண்ணேயுன்மேல்
மருகநினைவது கொண்டேன்
மையலதுகொண்டு தையலரைகண்டு
மருவியேயொருமுத்தம் தருவாளோவருவாளோ மை
பொற்கொடிமாதேநீவாரும் புணர்ந்துமேயாசையைதீரும்
சர்ப்பணிக்காரியென்று அப்பவேயரியேனே
அர்ப்புதமாகவே சொற்படியேநடப்பேன் நங்

பொது வசனம்.

இந்தப்பிரகாரமாக சுவாமியானவர் தேத்திமாத்தி திக்திப்பை யூட்டுவதுபோல் சொல்லிநடக்க அவர்பின்னாலே துலுக்கப் பெண் போவதைக்கண்டு தாதியானவள் பயந்து அரசனிடம் சொல்லவரும்போது நகரிதேசத்லையாளாநின்ற அப்துல்காதர் சாயப்பு கொலுவுக்கு வருகிற விதங்காண்க.



### அப்துல்காதர் வருகிற விருத்தம்.

தொட்டியேமேளசத்தம் குவலயம்நடுநடுங்க
கட்டியன்விருதுகூறி களிப்புடன் மனதுதேரி
அட்டியில்லாமல்மந்திரி அனைவரும்சூழ்ந்துவிர்க்க
மட்டில்லாவரசுசெய்ய மன்னனும்வருகின்றானே.

### அப்துல்காதர் வருகிர தரு.

நடுங்கவேகுடிகளும் நகரிதேசமாளும்
நல்லஅப்துல்காதர்வந்தானே

ஒடுங்கவேகுடிகளை உதைத்துவதைத்திட
அடங்காதபேர்களை அடித்துமடித்திட நடுங்
இடிகொம்புடங்கா பேரிகையடித்திட
எக்காளபேரிகை பூரிகையூதிட
வக்கணைவாத்தியம் வகையுடனூதிட
கெர்ட்டிமுழக்குடன் கட்டுவர்பாடிட
மூன்பாகமாதர்கள் தொந்தமாயாடிட
அட்டியில்லாமந்திரிமார் அருகினில்சூழ்ந்திட நடுங்

அப்துல்காதர் தேசவிசாரணை கவி.

அல்லிமான்ஜல்லிமான் அப்துல்ரகிமான்
அவரவர்களும்கொலுவினில் வந்தனர்களோ
ஷேக்மகம்மது செயலராவுத்தர்
சேனைத்தலைவர்களும் வந்தனர்களோ
டொப்பிஅங்கியும் ஜோடுகள்மாட்டியே
குரைத்தனத்தாரும் வந்தனர்களோ
இடையினில்கைலேயும் யிருக்கியேகட்டிடும்
எஜமான்ஷேக்மம்மது வந்தனர்களா
துபாக்கிதூக்கி தோளினில்வைத்து
தபாலென்றுசுடும் நவாப்புவந்தனர்களா
மாப்சுல்தான் மதார்சாயிப்பு
மண்டலீகர்களும் வந்தனர்களா
புள்ளிகள்போட்டு பிரித்துகணக்கெழுதும்
கொள்ளைகணக்கப் பிள்ளைகள்வந்தனர்களா

பொது வசனம்.

அரசன் கொலுவாகயிருக்கும்போது குலுக்கப்பெண்ணுக்கு சுவாமியானவர் வழிகாட்டி வனத்தைதாண்டி நடக்கிறவிதங் காண்க.

வெங்கடேசபெருமாள் சொல் கரு.

மங்கையேயென்கூட வாரும்
மலையெல்லாஞ்சுற்றி பாரும்
எங்கள்வீடுயிது தாண்டி
ஏகிநடந்திடுவோம் வாடி
தங்கும்கோபுரமிது தாண்டி
தபவாகநடந்திடு துண்டி
இந்தமலைகளைத் திடர்க்தோம்
அந்தமாய்கையல்களாடி விளையாடி
சொந்தமாய்மையலுடன் ஜோடியாய்சேருவோம் மங்

85752

பொது வசனம்.

இவ்விதமாக வெங்கடேச பெருமாளாகப்பட்டவர் குலுக்கப்பெண்ணுடனே நந்தவனம்போய் நந்தவனத்தின் வேடிக்கை யைகாண்பித்து போகும்போது அந்தசமயத்தில் தாதியானவள் அரசனிடம் சொல்லுகிறவிதங்காண்க.

தாதிகள் சொல் வசனம்.

கேளுமரசனே உன்மகளானவள் பூஜைசெய்திருக்கும்போது ஆரோஒரு புருஷன்வந்து பெண்ணே கண்ணேயென்று சொல்லி அழைத்துக்கொண்டு போகிறானையா சுவாமி,

அப்துல்காதர் சொல் தரு.

யெங்கேயிருக்குறான் பாருங்களவனை
ஏங்கிப்பிடிப்போம்நாம் வாருங்கள்
பொங்கும்சோறுபோல காருங்களவனை
பிடித்துவடிப்போம்நான் சேருங்கள்

வெங்கடேசபெருமாள் சொல் தரு.

வருகிறவன்யென்ன செய்வானோ
வந்துமேநம்மையென்ன வைவானோ
அரிகரியென்று துதித்தேனே
ஆதிமூலமென்று மதித்தேனே வரு

நங்கை சொல் தரு.

வந்தால்வரட்டுமே பார்ப்போம்
வாய்மொழிதன்னையே கேட்போம்
சிந்தைகலங்கியே வாடாதேமன்னா
சிதரியேயுன்மன மோடாதே வந்

அப்துல்காதர் சொல் தரு.

நொடிக்குள்ளேபெகிரியே பிடிப்போம்
நோகவேயவன்மனம் மடிப்போம்
துடிக்கவேயவனை யடிப்போம்
துஷ்டப்பயலைநாம் கெடுப்போங் கொ

வெங்கடேசபெருமாள் சொல் தரு.

சண்டாளியுன்னாலே கெட்டேனே
சாமார்த்தியமெல்லாம் விட்டெனேயெந்தன்
மண்டையையுடைப்பான்போல் தோணுதே
மதிமயக்கமிக காணுதே சண்

நங்கைசொல் தரு.

கதரியேயோடாதே மன்னவாநீயும்
கலங்கிதனிக்காதே முன்னேவா

அதிரநடந்து ஓடாதேமன்று
அஞ்சியேமீமனம் வாடாதே கதரி

அப்துல்கர்தர்சொல் தரு

கண்டுமேகோபத்தால் மண்டையுடைப்பேனென்று
கட்டியேயடித்தாயே
துண்டாகவெட்டுவேன் சண்டாளப்பயலென்று
கத்தியைப்பிடித்தானே
மண்ணளும்வேங்கனிட யெண்ணளைக்கொண்டு
மடையனேயென்றுசொல்லி
குண்ணவேயெந்தன்நெஞ்சம் கொண்டுவந்தபாவியென்று
கோபமாகவேகுத்தினனே
பண்ணியதவந்துக்கு பதிவிரதையைக்குலைக்க
பாசக்கயத்தால்கட்டியிழுத்தானே
யெண்ணியவிதிபயன் யிதுவேவுனக்கென்று
யேங்கித்தவித்திடபழித்தானே கண்டு



வெங்கடேசபெருமாள சொல் விருத்தம்

உருக்கியதங்கம்தன்னை யூக்தியபதுமையான
ரிக்மியின்மோகத்தாலே திருடனென்றெனைப்பிடித்து

மூருக்கபெகயற்றினாலே முன்பின்பிரிக்கிசுட்டி
சுதுக்கியேபிழிந்துபென்னை நசிக்கிறுரென்னசெப்வேன்

## வெங்கடேசபெருமாள் புலம்பல் தரு

ஐயோயிதென்னவிதியோ பென்னை
அடித்துநீயும்பிடித்து அநியாயம்செய்யவும் ஐ
வைகுந்தவாசராலே வந்தருதோயிது சுருன்
வாட்டியேயெந்தனை சாட்டியடிக்குறீர்
மேட்டிமையாகவே கேட்டுமேகொன்னீர் ஐ
உண்மையெதுவொசம்புவீர் என்னைகட்டிநீயும்திட்டி
ஓடவேயிரட்டுரீர் உண்மை
அண்ணன்தம்பியெனக்கு ஆருமில்லைஐயோ சுருள்
ஆசையால்வந்துமே மோசம்தானுனேன்
பேசவுமென்மனம் கூசுதேயென்செய்வேன் ஐ
கோபமில்லாமல் கேளுமேநீயும்
குரித்துயென்னைமரித்து குற்றம்பொருத்துவைத்துமேயாளும்
ஆபத்தைகார்க்கின்ற ஆதிமூலமும்செய்தருதோ சுருள்
அஞ்சியேநானுமே கெஞ்சியேகேட்டிட
வஞ்சகமில்லாமல் நெஞ்சினில்நாட்டியே ஐ

## வெங்கடேசபெருமாள் சொல் விருத்தம்.

குரித்துமேயென்னைநீரும் கோபத்தால்கேட்பீரையா
உரைத்திடபுத்திசொன்னேன் உணராமல்பெண்ணைநீங்கள்
தாத்தியேயடிக்குறீரோ துன்மார்க்கர்வந்துயென்னை
மரித்துமேஞாயம்கேட்க மன்னரைகாண்கிலேனே.

## வெங்கடேசபெருமாள் சொல் தரு.

ஆண்டவனேயென்று ஆரொருபெண்ணுனவள்
அழகுரல்கேட்டனையோ துஷ்ட்டர்களே
தாண்டியேநானுமப்போ தனியாய்வனங்கடந்து
தாராளமாகிப்போனேன் துஷ்ட்டர்களே
வேண்டியேமோகத்தா விரும்பியேவந்தென்னை
விடமாட்டேனென்றுசொன்னுல் துஷ்ட்டர்களே

தூண்டியிலகப்பட்ட துடிக்கின்றமீனைப்போல
துவளுகிறதுவங்தெனையோ துஷ்டர்களே

அப்துல்காதர் சொல் தரு.

எந்தன்பலத்தையுங்காட்டி யிழுத்துவதைக்கிறேன்வாட்டியே
சிக்கைகலங்கவைக்குறேன் தூக்கியேமண்வெட்டிபுதைக்கிறேன்

வெங்கடேசபெருமாள் சொல் விருத்தம்.

மூடருக்குபுத்திசொன்னல் நம்பமாட்டார்
முழுநாட்டும்பெண்களுக்கு புத்திசொன்னல் கேழ்க்கமாட்டார்
நாடரியும்வேசியுட பரப்பும்போமோ
கலமுடனேபொருள்பரிக்கும் நடத்தையாகும்
வீணருக்குபுத்திசொன்னல் கேழ்க்கமாட்டார்
வெள்ளெலிபிடித்திடவே விளையாட்டென்பார்
கூடவேயிவர்களுக்கு புத்திசொன்னேன்
கேட்டுவீர்யென்சொல்லை கிலேநாட்டுவீரே

அப்துல்காதர் சொல் தரு.

புத்திசொல்லவந்தமூடனே பிடித்துத்தள்ளும்குடிகேடனே
சற்றுமஞ்சாமலேயெடுத்தானே பெர்தன்
சமர்த்தன்மகளையும் கெடுத்தானே புத்தி

வெங்கடேசபெருமாள் சொல் தரு.

எந்தன்பின்தொடர்ந்து பேகியேவரக்கண்டேன்
இடரொன்றும்செய்யவில்லை துஷ்டர்களே
எந்தன்மனமரிய உண்மையாகச்சொன்னேன்
உடம்பெல்லாம்நோகுதையோ துஷ்டர்களே
தந்தையாரென்னை தழுவினதிரேகமெல்லாம்
தணல்போலெரியுதையோ துஷ்டர்களே
சந்தணம்புனுகுடன் ஜவ்வாதணிந்ததிரேகம்
தளும்புதேயுதிரங்கள் துஷ்டர்களே எந்த

அப்துல்காதர் சொல் தரு.

கிட்டிகோலெடுத்துமே மாட்டுங்கள் யிவனை
கிளம்பாமலேதள்ளி யுருட்டுங்கள்
எட்டிநடவென்று வாட்டுங்கள் யிவனை
இழுத்துயென்முன்பாக கொட்டுங்கள்



வெங்கடேசப்பெருமாள் சொல் விருத்தம்.

என்னிடசம்மந்தத்தால் யிருந்ததொருஸ்த்திமூன்றில்
உந்தனுக்குமூன்றிலொன்று உண்மையாய்தருவேனிப்போ
சொந்தமாய்வாங்கிக்கொண்டு ஊருக்கினில்நீங்களிப்போ
அந்தமாய்தேசம்சென்று அரசதுசெய்திடீரே.

பொது வசனம்.

இந்தப்பிரகாரமாக சுவாமியிடத்தில் மூன்றிலொரு பங்கு ரொக்கம்பெற்றுக்கொண்டு போனபிரகு சுவாமியானவர் தங்கையாகிய காளிகாதேவியை நினைக்க காளியம்மனும் பிரசன்னமாகிர விதங்காண்க.

காளிகாதேவி சொல் விருத்தம்.

கண்டவர்கலங்கிவாட காலனும்நடுநடுங்க
தண்டர்கள்பயந்துவோட துடிக்குடன்சூலமேந்தி
சண்டிசாமுண்டிபூதம் சகலரும்புடைகள்சூழ
மண்டலந்தன்னில்தேவி மாகாளிவருகின்றாளே.

காளிகாதேவி வருகிற தரு.

பராசத்திகாளியிதோவந்தாள் படையுடனே
பேய்பூதம்யிடைவிடாமல்சூழ
ஆரமோகனமாலைபாட அண்டத்தில்தேவர்களும்கண்டுபயந்தோட
தீரமாகவேவீரங்கூறிய சிங்கவாகனமீதிலேறியே-பரா

வேலுசூலங்கையில்தாங்கிடவே யிருபுறமும்
வேதநாதகீதம் பாடிடவே
காலதண்டமுமிவள் சூலமும்கைப்பிடி
உலகெலாம்புகழ்படைத்த நீலி
ஓதுமாமறைவேதல் பாடும்சூலி
அந்தணர்வேதம் கூறிடும்பாலி
அதிவீரசூரர்கள் கண்டுமேவாடிட பரா

சோதிமாமணிமகுடம் மின்னிடவேமார்பிலணிந்த
பீதிரத்தினமாலை துன்னிடவே
காதிலாடியகம்மல் தொங்கிடவே
கழுத்தில்சரப்பளிமாலை மின்னிடவே
அண்ணன்பாதம் அரியவேண்டியே
அதிகதுருசாய்காரிய மரியவேண்டியே பரா

காளிகாதேவி சொல் வசனம்.

சரணம் சரணம் அண்ணாவே என்னையழைப்பித்த காரணம் திருவுளம் பற்றியருளவேண்டு மண்ணாவே.

பெருமாள் வசனம்.

அகோ வாருமம்மா தங்கையே இந்தபெண்ணாலே நான் பட்டதுன்பம்போதும் இவள் தந்தையானவன் என்னையடித்து அனியாயஞ்செய்தான் நீயும் அதிக சீக்கிரமாகச்சென்று மலையடிவாரத்தில் நின்றுகொண்டு உருட்டிமிரட்டி பயத்தைக் காட்டிவாரும் என்தங்கையே.

காளிதேவி சொல் தரு.

துடுக்குடன்தானெழுந்தாள் காளிகாதேவி
சூதாகத்தானடந்தாள்

அடிக்கடிவாக்குறேன் அண்ணன் மனமகிழ
அஞ்சாதபயல்களே நெஞ்சைப்பிளந்திட தடு
வந்துமேகுதித்தாள் மனங்கலங்கி
நொந்துமேபதைத்தாள்
எந்தனைக்கண்டுமே எல்லோரும்துதித்திட
நொந்துமேமலையடி வாரத்திலிருந்திட

அப்துல்காதர் சொல் தரு.

சந்தோஷமாகவேநடப்போம் இந்த
சதியானமலையெல்லாம் நாமுமேகாப்போம்
வந்தவழிகளைப் பாரும்
வழிமின்றவன் யாருமேகூறும்

காளிகாதேவி சொல் கவி

கூறுமென்றுசொன்னபோது கொக்கரித்தெழுந்துகாளி
பாருங்களென்றுசொல்லி பதைக்கவேவதைப்பேனனே

காளிதேவி சொல் தரு.

காவல்தப்பிபோனதாரடா அடா துஷ்டா
கள்ளனேநீயெந்தவூரடா
ஆவலாகபோனசேதி அரியயெனக்குதெரியச்சொல்லும்
ஆட்டியேவுங்களை வாட்டியேவிடுவேன்காவலை
முழிக்காதேதிருடா யெதிரில்வந்து
முகத்தைப்பாரடாதிருடா
பழிக்குப்பழிவாங்க பார்த்தனேஇன்னேரம்
ஒழுங்காய்சொன்னலாச்சுது உன்னைநான்விடமாட்டேன்-காவ

அப்துல்காதர் சொல் தரு.

எந்தன்மகளை யெடுத்துவந்தவன் தன்னை
ஏகியேபார்த்துவந்தேன் நீலியரே
வந்தவழியிலேதான் வளைத்துக்கொண்டெனையும்
கண்டுகெடுங்கிவாடி காரிழையைவிட்டுவோடி
காசிபணத்தைதந்தான் நீலியரே
கூடிபடிக்கலாமோ

காளிதேவி சொல் வசனம்.

பூதங்களா நீங்கள் வாருங்கள் பிடித்துத் தின்னவே பாருங்கள் காதகப்பயல்களை இப்போ கடித்துத் தின்னவே வாருங்கள் ஓடிவருகுமா மொருபூதம் இவர்களை வோங்கியடிக்குமா மொருபூதம் இவர்களை வோங்கியடிக்குமா மொருபூதம் ஆடிவருமாம் சிலகணங்கள் துலுக்கரை அடித்துபிடிக்குமாம் பலகணங்கள் வாயைத்திறக்குமாம் சிலபேய்கள் அப்போ வந்துகடிக்குமாம் பலபேய்கள் ஓங்கியடிக்குமாம்வேதாளம் ஓடியொளிவாராம் பாதாளம் கூடியடிப்பாளாங் காளியரும் அப்போ கொண்டாட்டம் கொள்வாளாம் கூளியரும்.

அப்துல்காதர் சொல் விருத்தம்.

அடித்திடவேபேய்பூதம் அலரியெழுந்திருந்து
துடித்துமேமனமும்வாடி சுவாமியைமனதிலெண்ணி [தான்
கொடுத்ததோர்பொருளையெல்லாம் கொடுக்கிறேன்போபாதித்
தடுத்துநீசொல்லாமற்றான் தயவுடன்வாங்கிக்கொள்வீர்

வசனம்.

வாருமம்மா காளிகாதேவி சுவாமியென்றறியாமல் செய்த குற்றத்தாலும் காவலை தப்பிப்போனதாலும் மனம் பொருக்க வேண்டும் இந்தப்பொருளில் பேர்பாதி தருகிறேன் தடைசொல்லாமல் வாங்கிக்கொள்ளுமம்மா தாயே காளிகாதேவி

பொது வசனம்.

இவ்விதமாக சுவாமியிடத்தில் பெற்றுவந்த பொருள்களில் பேர்பாதி பகர்ந்து காளிகாதேவிக்குதந்து போனபிறகு சுவாமியைப்பார்த்து நங்கை சொல்லுகிற விதங்காண்க.

நங்கை சொல் வசனம்.

அகோவாரும் பிராணபதமே யிருவருங்கூடி கலந்திருப்போம் வாரும் பிராணநாயகா.

வெங்கடேசபெருமாள் சொல் விருத்தம்.

நோம்பியகல்அரிசி நொடிதனில்சமைப்பவள்போல்
வீம்புகள்பேசவேண்டாம் வேசியப்புறமேபோடி
பாம்பின்வாய்தேரைபோல பதைத்துநானிருக்கும்போது
சோம்பேரித்தனமாய்நீயும் சிரித்துநீயிருந்திடாயே

வெங்கடேசப்பெருமாள் சொல் தரு.

சுத்தபயித்தியக்காரி சொல்லுவாயேயின்னமீரி
சற்றும்பொருக்காமல் பெற்றதன்னைதயென்னை
சாட்டியேகோபத்தால் வாட்டியடிக்கும்போது
காட்டியேகண்ணை நீ மூட்டிவிட்டாய்சண்டை

நங்கை சொல் தரு

பத்தினிதவமது போச்சேயிந்த
பாவத்துக்காளாக வாச்சே
புத்தியுமக்கில்லையே ஒத்துநாமிருக்கவும்
பெண்பாவம்பெண்தோஷம் பின்னால்தொடர்ந்துவரும்
பெருமையென்தனை அருமையாய்சேர்ந்திடும் பத்

வெங்கடேசபெருமாள் சொல் தரு.

உருட்டியேகண்ணைகாட்டியேமன்னன் உறுதியரிந்தாயேசிமாட்டி
பிரட்டியேவார்த்தைகள் பேசாதேநீபோடி
திருட்டுத்தனமாக சீராய்குலுக்காதே
மூட்டுதனங்கொண்டு முன்னேபலுக்காதே

நங்கை சொல் தரு

மூட்டியேவந்தென்னையேசி மூடிக்காதேயுந்தன்கைவீசி
உருட்டியேகண்காட்டி திருட்டுத்தனமாக
ஊருக்குப்போவோம்நாம் வருமென்றழைத்திட்டாயே
உத்தேசித்துபாரு சத்தியமாய்சொன்னேன் மூட்

வெங்கடேசப்பெருமாள் சொல் சிசபத்தியம்.

காதலாயென்தனை கலந்துயிருக்கவும்
கன்னியல்ல போடிபோடி

நங்கை சொல் சீசபத்தியம்.

பாதகநானுமே பதைத்துமேவாடிட
பாவிநீவந்தயோ மோடிசெய்ய

வெங்கடேசபெருமாள் சொல் சீசபத்தியம்.

ஓதவேயென்தனுடன் உண்மையாயிருந்திட
உத்தமிநீயல்ல போடிபோடி

நங்கை சொல் சீசபத்தியம்.

போதமதாகவே பிரிந்திடவெந்தனை
பிரியமாய்வந்தாயோ யிந்தமோடி

பெருமாள் சொல் சுலோகம்.

வாதுகள்செய்ய வந்தாயோபோடி

நங்கை சொல் சுலோகம்.

காதலாய்வந்தேன் கன்னிவாட

பெருமாள் சொல் சுலோகம்.

சேதிகளறிவேன் திருடிநீபோடி

நங்கை சொல் சுலோகம்.

மாதுநான்வந்தேன் மருகவேகூடி

பெருமாள் சொல் தரு.

இன்னமுமுனக் கென்னுயிருக்குது
இட்டுவந்ததோஷத்தாலே பந்தமிருக்குது யின்

நங்கை சொல் தரு,

கண்ணைகாட்டியழைத்துவந்த கசடனேவாரும்
கண்டபடியேசிடுவேன் மூடனேவாரும்

பெருமாள் சொல் தரு.

கப்பல்பணம்சிலவழிக்கும் கண்ணாளனேடி
கண்ணைகாட்டியேசவந்தாய் எந்தனைவேண்டி

நங்கை சொல் தரு.

தப்படிக்கும்தாதனைப்போல் கட்டிபேசாதே
தாராளமாயிங்குவந்து யிட்டுப்பேசாதே

பெருமாள் சொல் தரு.

மானயீனமில்லாமலே மரித்துபேசுறாய்
மாளிகையில்வாரேனென்று குறித்துப்பேசுறாய்

நங்கை சொல் தரு,

ஈனமானமில்லையோதான் யெத்துக்காரனே
எனக்குவழிசொல்லிப்போவாய் சித்துக்காரனே

பெருமாள் சொல் தரு

காசிபணம்பரிக்குங்கள்ள சிரிக்கியேபோடி
கைகாட்டிபேசவந்தாய் மூரிக்கியேபோடி

நங்கை சொல் தரு

ஊசிவிற்குங்குறவனைப்போல் உள்ளம்வாடியே
உத்துஉத்துப்பார்க்கவந்தாய் யென்னைத்தேடியே

நங்கை சொல் விருத்தம்.

தேடிவந்தென்னைவிட்டு தீங்குகள்நினைத்தபாவி
கூடியேயிருந்தாலாச்சு குற்றங்கள்செய்வையானால்
நாடியேபெண்கள்பார்த்து நகைக்கவேயுன்னையிப்போ
வாடிடச்செய்வேனானும் மடிபிடித்திழுப்பேன்பாராய்

பொது வசனம்.

இந்தப் பிரகாரமாக சுவாமியை துலுக்கப்பெண்ணானவள் பிடித்திழுக்கும்போது அந்தசமயத்தில் மாயவா இன்னம் மனஞ் சோதிக்கவேண்டுமென்று தன்பெண்சாதியை சாட்டிகூட்டி வரும்படியாய் நினைத்தபோது அனுமாரானவர் அந்தரமார்க்கமாய் வருகிற விதங்காண்க.

அனுமார் சொல் விருத்தம்.

அண்டமும்நடுங்கிவாட ஆகாயதேவரோட
துண்டர்கள்கலங்கிவாட சூழ்ந்தபேய்பூதம்மோட
குண்டலம்செவியிலாட குலுங்கவேபணிகள்பூண்டு
எண்டிசைபுகழஆஞ்சனேயரும்வருகின்றாரே.



அனுமார் வருகிற தரு.

வந்தானேயனுமந்தசூரன் வானுலகத்தினிலே
எதிரில்லாவீரன்

இந்திராதி தேவர்களாட
எத்திசைரிஷிமுனிவர் சுத்திபாந்தோட
கடகசங்கணங்களாட கண்டுமேபேய்பூதங்களோட
அஞ்சனாதேவி யீன்றபாலன்
ஆதிமூலத்துக் கனுகூலன்

அனுமார் சொல் ஐம்பை.

பச்சைதிருமேனியனே பாதமதில்யான்சரணம்
உச்சிதமாயென்னையழைத்த உத்தமசேதிசொல்வீர்
மங்கைமணவாளாசுவாமி மாயகிருஷ்ணபெருமாளே
சங்கதிசொல்லவேண்டும் சுவாமிபெருமாளே

பொது வசனம்.

இந்தப்பிரகாரமாக சுவாமியானவர் நயனபாஷையால் அலமேலுமங்கையை அழைத்துவரும்படி சொல்ல அனுமாரானவர் தூதுபோகிற விதங்காண்க.

அனுமார் சொல் கந்தார்த்தம்.

கருகியேமுகங்கள்வாடி கயிலாயமதனைத்தேடி
குருவிபோல்பரந்தேயோடி கொக்கரித்தட்டிமீறி
மருவினையாடநீரும் மங்கையைக்கொண்டுவாரேனென்று
சரியானரூபங்கொண்டு.

அனுமார் சொல் தரு.

தாண்டியேவைத்தார் காலைத்தூக்கி
வேண்டியேவைத்தார்
ஆண்டவர்சொற்படி அம்மானையழைத்திட
ஆதிகயிலாயமவர் அருகினில்வத்திட
சோதிகயிலாயம்வந்து சிவன்பாதம்கண்டிட
துரிதமாயனுமந்தன் சுறுக்கினில்வந்திட

பொது வசனம்.

இவ்விதமாக அனுமாரானவர் அலமேலுமங்கையை அழைத்துவரும்படி கைலாயங் வருகிறபோது முக்கண்படைத்த சிவபெருமான் கொலுவுக்கு வருகிற விதங்காண்க,



பரமேஸ்வரன் சொல்

விருத்தம்.

பார்வதிதனக்குகந்த பாசமாயீசன்தானும்
நேர்பணியலங்கரித்து நேரமாய்போகுதென்று
வீரியந்தானெழுந்து விண்ணவர்பணிந்துநிற்க
காரிழையீசர்தானும் கனகசபைவருகின்றாரே.

பரமசிவன் வருகிற தரு.

கைலாசநாதரிதோவந்தார் சபையைத்தேடி
கைலாசநாதர்வந்தார் ஒயிலாய்நடைநடந்து
காதில்குண்டலமாட கையில்தண்டிகையேந்தி கயி

மயிலைப்போல்நடனமாட மன்னவர்கள்வந்துதேட
குயிலைப்போல்ராகம்பாட கொஞ்சியேமாதர்களாட
சடைமுடிதான்துலங்க சரப்பளிமேல்விளங்க கயி

இடையினில்பணிதுலங்க யிருபுஜம்தானுங்குலுங்க
ஒருமனதாகவே உண்மையுடனிருப்போர்க்கு
பரமனென்றுதுதிப்போர்க்குபடியளக்கும்கர்த்தனே கயி

அனுமார் சொல் வசனம்.

சரணம் சரணமையா கர்த்தனே உமது மைத்துனராகிய வெங்கடேசப்பெருமாளானவர் அலமேலு மங்கையை அதிக சீக்கிரமாக அழைத்துவரச் சொன்னாரையா பரமேஸ்வரரே.

ஈஸ்வரர் சொல் வசனம்.

அடாவாடா சிஷர்களே நமது தங்கையாகிய அலமேலுமங்கையை அதிசீக்கிரமாக அழைத்துவாருங்கள் சிஷர்களே.

அலமேலுமங்கை வருகிற விருத்தம்,

வாசனைமலர்கள்சூடி வந்திட்டசபையைநாடி
பூசியகதம்பம்வாடை புனுகுசவ்வாதணிந்து
கூசியேகண்கள்ரெண்டும் கொதித்திடும்சூரியன்போல்
மாசிலாமலரோன்காண மங்கையும்வருகின்றாளே.



அலமேலுமங்கை வருகிற தரு.

அஞ்சுகம்போலவே ரஞ்சிதமானமங்கை
அலமேலுமங்கைவந்தாள் மிகவடிவினிலழகிய
கொஞ்சிநடைநடந்து கோதையருடன்தொடர்ந்து சரு

குங்குமகளபமும் நங்கைமேல்வீசிட
கங்கணவளையல்கள் கைதனில்ஜொலித்திட அஞ்

பச்சைவயிரமணி பதக்கம்பளபளென்ன
பாதசரங்கள்துன்னவே காலிலிடபாதசரங்கள்
அச்சுதன்தேவியென்று அறிந்துமனங்களிக்க சரு

அஞ்சியேவனிதயர் வஞ்சியர்கூடிட
மிஞ்சியேகவரிகள் கொஞ்சியேபோடிட அஞ்
முத்துரவிக்கைமாட்டி முழித்துமேகண்கள்காட்டி
சற்றுமஞ்சாமலே சபைதனில்கைகள்நீட்டி
உத்தமியிவளென்று சித்தங்களிக்கநாட்டி சரு
உன்னிதமாதர்கள் கன்னியர்கண்டிட
யென்னையழைத்தவர் தன்னையேவேண்டிட அஞ்
மாசிலாமயிலைப்போல் பூசியகளபம்வீச
நேசனடிபாதம் காணவேமிகநாட
காசியுருமாலை கண்டசரங்கள்பாட கரு
கண்ணுளர்தேவியும் பெண்ணியவிதியால்
திண்ணனழைத்திட புண்ணியமிதுவென்று அஞ்

அலமேலுமங்கை சொல் தரு.

சருணமண்ணுசருணமண்ணு சடைமுடிக்கேசருணம்
திருமூவர்புகழ்கின்ற தேவாதேவாசரணம்
கொண்டல்வண்ணன்தேவியனை கூட்டிவரச்சொன்னதென்ன
எண்டிசையோர்தானறிய யெந்தனுக்குமுறைப்பீர்-சர

அலமேலுமங்கை சொல் வசனம்.

சரணஞ் சரணமண்ணுவே யென்னை யழைப்பித்த காரிய மின்னதென்று திருவுளம்பற்றி யருளவேணுமண்ணுவே.

பரமேஸ்வரர் சொல் தரு.

அத்தான்யுனைத்தேடி அழைக்கமன்தழைக்க
அன்புடன் மனம்வாடி
பெற்றுமேவாக்கது புரப்பட்டானுமந்தன்
உத்தசேதியது உண்மையாகச்சொன்னேன் அத்

அலமேலுமங்கை சொல் தரு.

என்றைக்கிருந்தாலும் யின்னுடுதாய்வீடு
இதுசதமாகுமோ எனண்ணு
பண்ணியதாலி பார்த்துக்கட்டினோர்முகம்
பாராமலிருந்தோர்க்கு தீராதவிசனம்சேரும்

பரமேஸ்வரர் சொல் தரு,

என்னுடன்நீபிறந்தாய் யென்தங்கை
இன்பமாய்நீவாழி அலமேலுமங்கை
பொன்னும்பொருளெல்லாம் பூஷணம்நான் தந்தேன்
புத்தியாய்நீவாழ்குவாய் அலமேலுமங்கை

அலமேலுமங்கை சொல் தரு,

சடைமுடி தான்தரித்து சதுராயெதிராய்வந்து
சந்தோஷமாய்த்தருவாய் அண்ணாவேநீரும்
கெடிபெத்தநாளுமே கீர்த்தியாய்வாழ்வதற்கு
படிதரம்குறையாமல் அடியாட்கருள்செய்வீர்

அலமேலுமங்கை சொல் வசனம்.

அகோகேளும் எனது அண்ணாவே என்மனதில் ஓர்கருத்திருக்கின்றது அது யென்னவென்றால் தாய்வீட்டிலிருந்து சீதனமாக வரிசை பெற்றுக்கொண்டு போனதேயாமாகில் அதில் யேதாவது ஒரு பொருள் குறைந்ததேயாமானால் ஓர்காலங்களில் கோபமான வேளையில் யேளிதமாகச் சொல்லிக்காட்டுவார் அப்படி வாராமற்படிக்கு நெருப்பும் நீரும்தவிர மற்ற யாவற்றுமான பொருள்களெல்லாம் பெற்றுக்கொண்டுபோய் சந்தோஷமாய் வாழ்ந்திருக்க வேண்டுமென்று யெண்ணியிருக்கிறேன் நீர் அவ்விதமாக சந்தோஷமாய் தாரும் யெனது அண்ணாவே.

பரமேஸ்வரர் சொல் தரு.

வயிரம்புஷ்பராகம் வைத்துயிழைத்திட்ட
வங்கிதோடாயிது யென்தங்கை

அலமேலுமங்கை சொல் தரு.

மயிர்மாட்டிராக்கடி மருக்கொழுந்துசொருகும்மல்
மாக்ஷியாய்தாரும் யெனண்ணா

பரமேஸ்வரர் சொல் தரு

கொத்துசரப்பளி கோர்வையுறுமாலை
குணமாகத்தந்தேனே யென்தங்கை

அலமேலுமங்கை சொல் தரு.

சித்தம்களித்துமே சிறப்பாகவைத்திட்ட
சிரானபெட்டிதாரும் யென்னண்ணா

பரமேஸ்வரன் சொல் தரு.

காப்புகொலுசுடன் கண்டசரமாலே
கண்டுகொள்வாயென் தங்காய்

அலமேலுமங்கை சொல் தரு.

மாப்பிள்ளையும்நானும் மகிக்ஷியாய்குந்திட
மணையொன்றுநீர்தாரும் என்னண்ணு

பரமேஸ்வரன் சொல் தரு.

காசிபுட்டாசேலே கனத்தஆரமாலே
கண்டுகொள்வாயெந்தன் தங்காய்

அலமேலுமங்கை சொல் தரு.

காசியில்பதித்திட நல்லமூக்குத்தியொன்று
நலமாகநீர்தாரும் என்னண்ணு

பரமேஸ்வரன் சொல் தரு.

வாசனைமலர்கள்சூட்டி வைத்திடராக்கடி
வகையுடன்தந்தேனே யென்தங்காய்

அலமேலுமங்கை சொல் தரு.

கூசிடகண்களும் கொடுத்தநகைக்ளெல்லாம்
குவலயப்புகழ்வார்கள் யென்னண்ணு

பரமேஸ்வரன் சொல் தரு.

கூடத்தில்வைத்திட குடவிளக்குதந்தேன்
குரிப்பாகயிதைப்பாரும் யென்தங்காய்

அலமேலுமங்கை சொல் தரு.

மாடத்தில்வைத்திட மணிவிளக்குவொன்று
மாயவர்மகிழ்ந்திட யெனண்ணு

பரமேஸ்வரன் சொல் தரு.

சொந்தமாகநீயும் சொன்னபொருளெல்லாம்
சுருக்காகத்தந்தேனே யென்தங்காய்

அலமேலுமங்கை சொல் தரு.

எந்தன்மாளிகைதனில் குந்தியேபால்காச்ச
நாற்காலியொன்றுதாரும் யெனண்ணு

பரமேஸ்வரன் சொல தரு.

தப்பிதமில்லாமல் செப்புகுடங்கள்தட்டு
தாம்பாளந்தந்தேனே யென்தங்காய்

அலமேலுமங்கை சொல் தரு.

ஒப்பியேநானுமே உண்மையாகப்பெற்றேன்
ஊருக்குப்போய்வாரேன் யென்னண்ணா

அலமேலுமங்கை சொல் கவி.

குண்ணாமல்யென்தனுக்கு கொடுத்திட்டவரிசைபெற்றேன்
அண்ணாவுன்பாதத்திற்கு அனேகவந்தனங்கள்செய்தேன்

பரமசிவன் சொல் கவி.

விண்ணாளர்போலநீயும் வீடுபோய்சந்தோஷித்து
கண்ணாளனுடனேகூடி களிப்புடன்வாழ்ந்திடாயே

அலமேலுமங்கை சொல் தரு.

போய்வாரேன்போய்வாரேன் எனதுஅண்ணா
புண்ணியனார்மாளிகைக்கு போய்வாரேனண்ணா

பரமசிவன் சொல் தரு.

போய்வாரும்போய்வாரும் எனதுதங்காய்
புத்தியுடன்நீயும்வாழ்வாயே எனதுதங்காய்

அனுமார் சொல் விருத்தம்.

திடுக்கெனத்தானெழுந்து துரிதமாயோடிவந்து
துடுக்குடன்புரவிநான்கை துரிதமாய்ரதத்தில்கட்டி
அடுக்கானரதத்தின்மீதில் அலமேலுமங்கையேற
சடுக்கெனரதத்தைதூண்டி சுவாமிமுன்வருகின்றாரே.



அனுமார் சொல் தரு.

நாகமணிதேரைநடத்தியே அனுமந்தன்
பாகவதனாகஇருந்திடவே பாட்டைவழிகளில்நடத்தியே-நாக

அலமேலுமங்கை சொல் தரு.

ஆர்தையும்கோட்டானும் அலரியோடுது
ஆகாசகுணங்கண்டு மனதுவாடுது
வீச்சுளிகட்டியே வீரிட்டுயோடுது
போரவழியிலென்ன பொல்லாங்குநேருமோ
எண்ணினயெண்ணத்தில் யிடர்வரக்காலமோ
எனதுஅண்ணர்கீர்த்தி யெங்கும்பேராகுமோ

அனுமார் சொல் தரு.

அஞ்சாதேயென்றுசொல்லி அம்மனைத்தேற்றியே
அடிக்கடிபுரவியைத்தூண்டியே ஆறுமலைகளைத்தாண்டியே

பொது வசனம்.

இந்தப் பிரகாரமாக அலமேலுமங்கையை அனுமாரானவர் அழைத்துவருகின்றபோது அந்தசமயத்தில் சுவாமியானவரைப் பிடித்து இழுப்பதைக்கண்டு என்பெண்சாதி வருகிறாளென்று சொல்ல நங்கையானவள் சுவாமியுடன் வாதாடுகிற விதங்காண்க.



நங்கைக்கும் சுவாமிக்கும் தர்க்கம்.

சுவாமி சொல் தரு.

கொண்டமனைவியர்க்கும் ரெண்டகம்நினைக்கொணாது
கோதையேன்யிதுவாது பெண்

நங்கை சொல் தரு.

அண்டையில்வந்திருக்க ஆசையானவள்நானிருக்க
ஆகாதோமனம்நோகாதோ அண்டை

சுவாமி சொல் தரு.

அடுக்குமோநீசொல்லும் வார்த்தையெல்லாம்பெண்ணே
அடுக்காதேகுடிகெடுக்காதே அடுக்கு

நங்கை சொல் தரு.

முடுக்கானவார்த்தைபேசி மோசம்செய்யவேண்டாம்
கெடுக்காதேவார்த்தைதடுக்காதே முடு

சுவாமி சொல் தரு.

பாவமென்றுபாராமல் தேவியாள்வந்தென்னை
ஏசுவாள்வாயாலேபேசுவாள் பாவ

நங்கை சொல் தரு.

கோபமாகவந்துந்தன் குமரியாளும்கைபிடிக்க
கொடுப்பேனோநான் கையாலடிப்பனே கோப

சுவாமி சொல் தரு.

கண்டவளைகைபிடித்து கொண்டவளைவிட்டுவிட
தொள்ளுமோமனந்தள்ளுமோ கண்ட

நங்கை சொல் தரு.

கண்ணுக்குநிறைந்ததொரு பெண்ணுகநானிருக்க
காட்டுரீர்மிரட்டி போட்டுரீர் கண்ணு

சுவாமி சொல் தரு.

சக்களத்திவந்தாளென்று பக்குவமாயுன்னைக்கண்டு
கொட்டுவாள்வாயால் திட்டுவாள் சக்கா

நங்கைசொல் அகவல்.

என்னசொன்னாலும் யினிமேல்கேட்கேன்
கன்னிகழியாப்பெண்ணை கைங்கொள்ளவந்து
உன்னிதவார்த்தைகள் ஒட்டியேசொன்னாய்
பன்னியேதடைசெய்ய படுபாவிநியாமோ
ஒப்பியேயென்றனை உண்மையாய்சேரும்
தப்பிதமில்லாமல் தயவுடன்வாழும்

நங்கை சொல் தரு.

அரண்மனைக்குள்ளேநீர்வாரும் நீர்வாரும்
ஆசைதீர்க்கவேகண்ணால் நீர்பாரும்

சுவாமி சொல் தரு.

வாராளேயிதோயென்தேவி யெந்தன்தேவி
வாவென்றழையாதேயென்னைக்கூவி யென்னைக்கூவி

நங்கை சொல் தரு.

சந்தோஷமாய்சொன்னவார்த்தை போச்சேபோச்சே
தனியாய்நிற்கவிதி யாச்சேயாச்சே

நங்கை சொல் தரு.

மாயவித்தைகள்பேசி யெனனைபேசி
மயக்கவந்தாயே கைவீசி

சுவாமி சொல் தரு.

தந்திரமாகவந்துமுன்னே வந்துமுன்னே
தயவானவார்த்தைகள் சொன்னேன்சொன்னேன்

நங்கை சொல் தரு.

மரியாதையாயென்கூடவாரும் நீரென்பின்வாரும்
மருவியணைந்தால்சுகம்போதும் போதும்

சுவாமி சொல் தரு.

தெரியாமல்யென்சொல்லைக்கேட்டு சொல்லைக்கேட்டு
தேம்பியழலானாய்விதிகெட்டு விதிகெட்டு

சுவாமி சொல் கொச்சகம்.

கோமளமாதேயெந்தன் கொஞ்சுங்கிளிரஞ்சிதமே
காமன்கணையாலே களைத்துமிகவாடவேண்டாம்
ஜாமமதுநான்குக்கும் சதிருடனேயிருவருமாய்
மாமன்மகளைப்போல் மருவியேயிருந்திடுமே

சுவாமி சொல் வசனம்.

கேளும் பெண்ணேநங்கா மன்மதன் கணையால் வாடவேண்டாம் ஜாமம் நான்கும்போதுமுன்னே என்பெண்ஜாதிக்கு ஒரு தந்திரம் செய்துவிட்டு வருகிறேன் பாரும் நங்காய்.

சுவாமி சொல் கந்தார்த்தம்.

கோரியயெண்ணம்போல குறைவிலாமுடிக்கவெண்ணி
சாரியாயண்ணன்கையில் சகலமும்பெற்றுக்கொண்டு
சீருடன்பணிகள்வாங்க சிந்தையின்மகிழ்ச்சியாகி
பாரியரதத்தில்வைத்து வருகிற.

சுவாமி சொல் தரு.

பாக்கியமேபாக்கியம் யெனதுதேவி
சிலாக்கியமே சிலாக்கியம்
பாக்கியமாகவே பலபொருள்பெற்றுவராள்
போக்கிரிதனமாகவே பொருளிலொன்றுமகைத்தேன்
வாக்கைக்கொடுததுமே வரிசையைக்கொடுத்தேன் பாக்

பொது வசனம்.

இவ்விதமாக அலமேலுமங்கை கொண்டுவருகிற வரிசையில் சுவாமியானவர் குறைக்க அந்த சமயத்தில் அனுமார் சொல்லுகிறவிதங்காண்க.

அனுமார் சொல் தரு.

பாரியசவுக்கெடுத்தான் அனுமந்தர்கைதனில்
பம்பரம்போலவே சுழட்டியடித்தான்
நேராகப்புரவிகள் நில்லாமலோடிட
நெடுமுடிகொடிகளும் வேருடன்சாய்ந்திட பாரி

ஆந்தையுங்கோட்டானும் அலரியோட
அலமேலுமங்கையும் கண்டுமேவாட
பார்த்துமேபக்ஷிகள் பயந்துமேயோட
பாயும்புலிகளும் கண்டுமேவாட பாரி

கடிவாளக்கயிற்றை கைதனில்பிடித்து
காந்தாளகோபங்கள் தன்னையடக்கி
வேகமாய்புரவிகள் வெகுண்டுடன்மீறி
விட்டுவருகிறான் மலைமீதில்சாரி பாரி

அலமேலுமங்கை சொல் விருத்தம்.

அண்ணாநீயெந்தனுக்கு அளித்திட்டவரிசைபெற்றேன்
கண்ணாளர்பார்த்துபார்த்து கலங்கவேயேசுவாரே

யெண்ணாளும்நானும்பேய்போல் பின்னாக தவித்திடாமல்
ஒண்ணாகிலும்குறைவு யில்லாமல்சொல்லுவாரே.

வசனம்.

வாரும் அனுமந்தபாலகா நான் கொண்டுபோகின்ற வரிசையில் ஒருபொருளாகிலும் குறைவில்லாமல் இருக்கின்றதா எண்ணாளைக்கும் ஒருசொல்லாக சொல்லுவார் ஆனதினால் இப்போது வந்த வரிசையில் ஒவ்வொன்றாக சோதித்துப்பார்த்துசொல்லும் அனுமந்தபாலகா.

அனுமார் சொல் தரு.

பத்துவிரல்நிறைந்த பவுத்திரமோதிரம்
நத்துமூக்குத்தியுடன் வந்திருக்கக்கண்டேன்

அலமேலுமங்கை சொல் தரு.

கங்கணகடகமும் கைக்கேற்றவளையலும்
மங்கைநான்சொன்னதுபோல் மகிழ்ந்துபாருமே

அனுமார் சொல் தரு

கண்டசரமாலைகள் கழுத்திலிடுமாரங்கள்
தண்டையுடன்வந்திருக்க சதுராய்கண்டனே

அலமேலுமங்கை சொல் தரு.

கொண்டைகுப்பிராக்கடி குலுங்கியிடும்பணிகளும்
எண்டிசைமதித்திடவே யிருக்குதாபாரும்

அனுமார் சொல் கரு.

மயிர்மாட்டிஜம்புலும் மருவிடும்கம்மலும்
வயிரத்தாலிழைத்துவைத் திருக்கக்கண்டேன்

அலமேலுமங்கை சொல் தரு.

காலாழிபீலாழி காலிலிடும்பாதசரம்
நாலாவிதத்தினுசுகளும் நன்றாய்பாருமே

அனுமார் சொல் தரு.

பொருப்புடனேயுமதண்ணன் புகழ்ந்துயளித்ததில்
கரிப்பிலையில்லையென்று கண்டுகொண்டேனம்மணி

### அலமேலுமங்கை சொல் விருத்தம்.

விருப்பமாய்மனதிலெண்ணி வீட்டையான்விட்டுப்போக
பொருப்புடன்வரிசைதந்து போவென்றார்யெனது அண்ணன்
கரிப்பிலையில்லையென்று கலங்கியேயழுதுவாடி
திருப்பதிபோகாமற்றான் திரும்பியேநடக்கின்றாளே.

### வசனம்.

வாரும் அனுமந்தபாலகா தாயற்றபோதே பெண்திக்கற்ற தென்பார்கள் அதுபோல எனது அண்ணன்செய்த சதியை வ தோகபடம் வைத்துக்கொண்டு தாய்வீட்டி லிருக்கவொட்டாம லும் உண்மையாயவன் வரிசைகொடுப்பதைபோல கரிப்பிலையில் லாமல் வரிசை வைத்திருக்கக்கண்டேன் இந்தவிடத்தில்தானே காவலாகவிரும் நான் அதிக துரிதமாகச்சென்று கரிவேப்பிலை வாங்கிக்கொண்டு வருகிறேன் அனுமந்தபாலகா.

### அலமேலுமங்கை சொல் தரு.

கூரியசாபமது தூறுக்கப்போக — ஓ அண்ணா அண்ணா
குணமில்லாசகுணங்கண்டு நானும்வாரனே
கணவரும்நானுமாக கலந்திருக்கவே — ஓ அண்ணா அண்ணா
கண்ணால்பார்க்க கருத்துமில்லையோ
கூடபிறந்த தங்கையானுமே — ஓ அண்ணா அண்ணா
குண்ணியேமனம் வாடலாகுமோ
காடுமலை ஆறுதாண்டியே — ஓ அண்ணா அண்ணா
கானுநோக கலங்கிவாரனே

### பொது வசனம்.

இவ்விதமாக அலமேலுமங்கையானவள் அழுதுக்கொண்டு போக அந்தசமயத்தில் பொழுதுவிடிந்துவிட அதைக்கண்டு அல மேலுமங்கை நடுவழியில் நின்றுவிட அந்தசமயத்தில் நங்கையா னவள் சுவாமியைப்பார்த்து சொல்லுகிற விதங்காண்க.

### நங்கை சொல் வசனம்.

வாரும் எனது பிராணநாயகா இருவரும் பள்ளியரைசேர்ந் து கூடிவிளையாடுவோம் வாரும் பிராணநாயகா.

### வெங்கடேசப்பெருமாள் சொல் தரு.

ஏழையடிநானுனக்கு யெந்தன்மீதில்கோபம்வேண்டாம்
வாழைப்பழம்நானளித்தேன் வாங்கிபொசித்திடுவாய்
வெண்பொங்கல்புளியோரை வேணவும்தந்தேன்யானும்
கண்மணியேவாங்கிநீயும் கண்டுபொசித்திடுவாய்
மாம்பழம்பிலாக்கனியும் மற்றதெல்லாம்நீபொசித்தாய்
தாம்பூலம்நானளித்தேன் தயவாய்தரித்துக்கொள்ளும்



### பொது வசனம்.

இவ்விதமாக சுவாமியும் நங்கையும் பஞ்சணையில் இருக்கும் போது நான்குஜாமமுஞ்சென்று பொழுதானது விடிந்தபோது அதைக்கண்டபோதே சுவாமியானவர் தன்னுடைய மாய்கைதெரியும்படி ஆனந்தசந்தோஷங்கொண்டு ஆசையாய் நகைத்தபோது அந்த சமயத்தில் மார்பில் வைத்திராநின்ற மங்கைலக்ஷிமிவெளியில்வந்து பார்க்கும்போது நங்கையைக்கண்டு சொல்லுகிறவிதங்காண்க

### மங்கை சொல் தாக்கம்.

மாளிகையில்பேசவந்த மட்டிசிருக்கி அடிமட்டிசிரிக்கி
மன்னரைகெடுக்கவந்த கெட்டசிரிக்கி அடிகெட்டசிரிக்கி

### நங்கை சொல் தரு

காளியைப்போல்வந்தயடி காதகக்காரி அடிகாதகக்காரி
கண்டபடிபேசிடுவேன் வாதுகள்கூறி அடிவாதுகள்கூறி

### மங்கை சொல் தரு

சண்டைபோடவந்தயடி சதிகாரப்பாவி அடிசதிகாரப்பாவி
சுவாமியென்றபாரேண்டி மரியாதையடிமரியாதையடி

நங்கை சொல் தரு.

கொண்டையைபிடித்தடிப்பேன் பேசாதேவாடிபேசாதேவாடி
கூடவந்தனுாயமென்ன சொல்லடிசூதாசொல்லடிசூதா

சுவாமி சொல் தரு.

ஆருக்கென்றுசொல்லுவேனான் ஆதித்தன்கண்ணே ஆதித்தன்
ஆத்திரப்படாதேபோடி கோபித்தன்கண்ணேகோபித்தன்கண்

மங்கை சொல் தரு.

தாசியோடியுந்தன்குலம் தளுக்காய்பேசாதேதளுக்காய்பேசாதே
தாராளமாயிங்குவந்து நானும்சிரியேநானும்சிரியே

நங்கை சொல் தரு.

கூச்சமுனக்கில்லையோடி கோபக்காரியேஅடிகோபக்காரியே
கூந்தலைப்பிடித்தடிப்பேன் நானும்சிரியேநானும்சிரியே

மங்கை சொல் தரு.

வம்பாகபேசவந்தாய் வாயாடிபோடிவாயாடிபோடி
வந்துனுாயம்சொல்லவந்தாய் நீயுமேபோடிநீயுமேபோடி

நங்கை சொல் தரு.

சும்மாபேசவந்தாய் நில்லும் நில்லடிஅடிநில்லும்நில்லடி
சோரஞ்செய்யவந்தவழி செல்விநில்லடி அடிசொல்விநில்லடி

சுவாமி சொல் தரு.

அடித்துபேசாதேநங்கா நங்கையே அடிநங்காநங்கையே
அழுதுஅழுதுபேசாதடி மங்காமங்கையே அடி மங்காமங்கையே

மங்கை சொல் தரு.

முட்டிமுட்டிபேசவந்தாய்முரிக்கிமுரிக்கியே அடிமுரிக்கிமுரிக்கியே
முனமுனென்றுபேசவந்தாய்கொழுத்தசிரிக்கிரே அடிகொழுத்தசி

நங்கை சொல் தரு.

எட்டிஎட்டிபேசாதடி யெதிர்த்துபேசாதே அடியெதிர்த்துபேசா
ஏளிதமாய்கண்டபடி குரித்துபேசாதே அடிகுரித்துபேசாதே

மங்கை சொல் சீசபத்தியம்.

பெண்ஜாதிநானுமே பிரியமாய்வந்திருக்க
பேய்போலபுரவேவந்தாயோடி போடிபோடி

நங்கை சொல் பத்தியம்.

உண்ணவேசாதம் உணவரிந்தபாக்கு
முன்னேமண்ணள்ளிபோடவந்த மலடிமலடி

மங்கை சொல் சீசபத்தியம்.

கண்ணுஜாடைகாட்டி கணவனைமயக்கியே
கைகலக்கவந்தாயோடி கழுதைநீபோடி

நங்கை சொல் சீசபத்தியம்,

கன்னியேயிருவரும் கணவன்கேளிக்கையை
கண்டுதடுத்தநாய் போடிபோடி

மங்கை சொல் தரு.

இப்படிசொல்லாதேஇடிப்பேன்நான் போடிபோடி

நங்கை சொல் தரு.

அப்படிசொல்லினுல்அடிப்பேன் போடிபோடி

மங்கை சொல் தரு

ஒப்பியேயென்னுடன்உத்தமாநீர் வாரும்வாரும்

நங்கை சொல் தரு.

கைப்பிடியாய்பிடித்தேன்கணவனேநீர் வாரும்வாரும்

வெங்கடேசபெருமாள் சொல் விருத்தம்.

கூடியேமாதர்வந்து குரித்தென்னைமதித்திடாமல்
நாடியேகைப்பிடித்து நங்கைமார்செய்கைப்பார்த்தால்
ஆடுமோர்மயில்மீதேறும் ஆண்டவன்முருகனைப்போல்
வாடியேதவிக்கநானும் வந்துதேவிதியென்செய்வேன்

பொது வசனம்.

இந்தப்பிரகாரமாக சுவாமியை பிடித்து இழுக்கும்போது அவர் மனங்கலங்கி அழுதாயிருக்கும்போது மங்கைலக்ஷிமியும் நங்கைலக்ஷிமியும் பயந்து சுவாமியென்று அரியும்படிக்கு கிரோமாகிய கோபத்தைக்காட்டி சொல்லுகிறவிதங்காண்க.

சுவாமி சொல் கந்தார்த்தம்.

கதிர்முடிகலகலென்ன கண்களில்பொறிபாக்க
அதியாதபேர்களில்லை சுவர்லோகமண்டலத்திலென்னை
மதியாமலிருவர்சண்டை மானபங்கங்கள்செய்தார்

சுவாமி சொல் தரு.

எடுத்திடுவேன்திருமனதையும் கெடுத்திடுவேன்
ஏங்கிதவிக்கஒங்கியேநானும் எடுத்திடுவேன்
அடித்திடுவேன் மங்கையாள்
கண்டுமேமனதில் வந்திடச்செய்வேன்
நங்கையாள்கண்டுமே நடுங்கியொடுங்கிடச்செய்வேன்
நாராயணகோவிந்தாவென்று நாடிதுதிக்கவந்திடுவேன்

சுவாமி சொல் விருத்தம்.

ஏக்கமாயென்தன்மீதில் யிருந்திடும்பெண்ணேகேளாய்
தாய்க்கிழவிபோலயென்தன் தலைவாசல்தனிலேநின்று
சீக்கிரமாகயேகி சிறந்தபட்டாடைபூண்டு
பாக்குவெத்திலைமடிக்கும் பணிப்பெண்ணாயிருந்தி[illegible]

(வ-ம்) கேளும்பெண்ணே நங்காய் நீ [illegible]
தவம் புரிந்தபடியால் உன் மனதின்படியே [illegible]
இப்போது என்னிட பாதத்திலிருந்து அநுகினரு[illegible]
கொண்டு பணிப்பெண்ணாயிரும் பெண்ணே நங்காய்.

நங்கை சொல் கந்தார்த்தம்.

தேங்குமந்தாரை செண்பகம்
கொன்றையுடன் அறுமலர்புஷ்ப்பமேந்தி
பாங்குடனேபன்னீரால் அபிஷேகமாட்டி
பாதமதையான் திலகப் பணிந்துநின்றேன்
நான்விதப்பட்டாடை பாதம்துவட்டி
நல்லமலர்சாத்தியே நமஸ்கரித்து

நங்கை சொல் தரு.

பாங்குடனேயெனக்கார்க்க தெரிசனங்கொடுத்தீர்
எனக்காகசிந்தை நொந்தீர்
அரிகரியென்றும்மை அனுதினம்துதித்திட
வரிசிலைவீரர்போல வந்துவுரவாட
வைகுந்தவாசரே மலரடிசரணம்

சுவாமி சொல் கந்தார்த்தம்.

பத்தியாள்நீயேயென்று பக்ஷமாய்மனதிலெண்ணி
கர்த்தனுமெழுந்திருந்து கடுகியேயோடிவந்து
இத்தனைநேமாயின் யெண்ணத்தின் நினைவைப்பார்த்தேன
தித்திமியெனவேபேரி திருப்பதிநகரில்

வெங்கடேசபெருமாள் சொல் தரு

தெரிசனங்கொடுத்தேன் யென்துவரிசையுங்கைகொடுத்தேன்
அரசனைப்போல்வந்து புருஷனாகக்காட்டி
அண்டையில்நிறுத்தியே பெண்டாளைப்போல்கார்த்தேன்

வாழி அகவல்.

இந்தகோர்சரித்திரம் யின்பமாய்கேட்டோர்
பார்த்தோர்வாசித்தோர் பலநாளும்
ஆல்போல்தழைத்து இருகுபோல்வேரோடி
மூங்கில்போல்தழைத்து முசியாமல்வாழ்க
பாடினதோர்பிள்ளைக்கும் பாக்கியமருள்வாய்
காலுதலைநோகாமல் கண்ணறுவாராமல்
காத்திடவேண்டும் கடவுளேசரணம்

மங்களம் திரு.

அடியுங்கள்ஜெயபேரிகை அச்சுதன்போல
அன்பாய்மங்களம்பாடி அடியு

...கெடியாகவே கீர்த்திப்பிரதாபமாய்
... நாட்டிலுள்ளோர்காண அடியு

...கைசத்தம் யெங்குமேகொட்டிட
...கரபாணி சரித்திரம்சொல்லிட
...சுரம்வீணை நமரிகள்யூதிட
...நமிரண்டோடி மேளத்தொனிகள்பாட அடியு

நாககன்னிகள்வந்து நாட்டியமாடிட
நாரதர்வந்துமே வீணைகள்மீட்டிட
தேவர்களும்நின்று திருநடனமாட
மேவிஅலமேலு மங்கைசிரித்தாட அடியு

பூதகிமுலைப்பாலை பிடித்துமேயுண்டிட
புண்ணியசரித்திரம் பூமியெங்குமதிர
மங்கைலட்சுமியையு மனதில்நினைத்திட
மாயனேயுன்பாதம் நாளும்துதித்திட அடியு

அச்சுதாவைகுந்த அரிகரிகோவிந்தா
பச்சைநீலவர்ண பாதம்கருணமென்று அடியு

மட்சயகூர்மவு தாராவாராகநரசிம்மா
வாமனரூபா மலரடிசருணமென்று அடியு

திருப்பதிநகரெங்கும் ஜெயபேரிமுழங்கிட
தேவர்கூடிபுஷ்ப மாரிபோல்பொழிந்திட
தாசன்வடமலை சரித்திரமுரைத்திட
தேசத்திலுள்ளோர்கள் தேடிதுதித்திட அடியு

அரம்பைபூர்வசிவந்து ஆலங்களேந்திட
அழகாய்திருஷ்டிகளவர் அன்புடன்கழித்திட
வெங்கடேசபெருமாள் நாடகமுற்றிட
வேண்டிசிருவன் குணமுனிசாமியச்சிட

5752
அடியுங்கள்ஜெயபேரிகை அச்சுதன்பேரில்
அன்பாய்மங்களம்பாடி அடியுங்கள்

வெங்கடேசபெருமாள் நாடகம்

முற்றிற்று.